# HUMOROUS ESSAYS

## IN TAMIL

BY

RAO BAHADUR P. SAMBANDAM, B.A., B.L.,

*Author of:*

The Two Sisters, Galava, The Eye of Love, The Curse of Urvasi, The Merchant of Vanipura, Fate and Love, Simhalanatha, Pushpavalli, Amaladitya, Magapathi, The Ideal Wife, Siruthondar, The Golden Fetters, True Love, The Bandit Chief, Bricks-Between, At Any Cost, The Fair Ghost, The Wedding of Valli, Brahmin *vs* Non-Brahmin, Vijayarangam, As you like it, Sati Sulochana, Lord Buddha, The Tragedy of Silence, The Good Fairy, Geetha Manjari, The True Brother, Malävikagnimitra, Chandrahari, The Demon Land, Sabapathy Part I, The Pongal Feast or Sabapathy Part II, A Rehearsal or Sabapathy Part III, Sabapathy Part IV, Blessed in a Wife, The Dancing Girl, Subadra-Arjuna, Karna the Giver, Sahadeva's Stratagem, The Surgeon General's prescription, Vichu's Wife, Sakuntala, Vikramorvasi, The Point of View, The Two Selves, The Tragic Denouement, The Sub-Assistant Magistrate of Sultanpet, Harischandra, Blind Ambition, Markandeya, Sarangadhara, Manohara, The Two Friends, The Knavery of Kalappa, As We Sow-So We Reap, Over Forty Years Before the Footlights Parts I, II, III, IV & V, The Search, Prince Koneri, The Crowd in the Shandy, Ratnavali, The Gypsy Girl, Vaikunta Vaithiyar, Dikshithar Stories, Funny Stories, The Good Sister, Short Stories, Hints to Actors, The Tamil Drama etc. in Tamil; and Harischandra, and Yayathi in English.

FIRST EDITION

Madras:

PRINTED BY THE PEERLESS PRESS,

·· ·INGHI CHETTY STREET, G. T.

2.00

[All Rights Reserved 1937 Price per Copy

# ஹாஸ்ய வியாசங்கள்

தமிழில்

ராவ் பஹதூர்

## ப. சம்பந்த முதலியார், பி. ஏ., பி. எல்.,

அவர்களால் இயற்றப்பட்டது.

இந்நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்றத் தமிழ் நூல்கள்:—

லீலாவதி-சுலோசனை, சாரங்கதரன், மகபதி, காதலர் கண்கள், நற்குல தெய்வம், மனோஹரன், ஊர்வசியின் சாபம், இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், கள்வர் தலைவன், தாசிப்பெண், மெய்க்காதல், பொன் விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, ரஜபுத்ரவீரன், உண்மையான சகோதரன், சதி-சுலோசனா, புஷ்பவல்லி, கீதமஞ்சரி, உத்தமபத்தினி, அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றும் பாகம், சபாபதி நான்காம் பாகம், வள்ளிமணம், பேயல்ல பெண் மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனா, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து, மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு, சுல்தான்பேட்டை சப் அசிஸ்டென்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், விக்ரமோர்வசி, முற்பகற் செய்யின் பிற்பகல் விளையும், நாடகமேடை நினைவுகள் முதற்பாகம், இரண்டாம் பாகம், மூன்றும் பாகம், நான்காம் பாகம், ஐந்தாம் பாகம், நாடகத் தமிழ், யயாதி, பிராம்மணனும் சூத்திரனும், வாணீபுரவணிகன், இரண்டுநண்பர்கள், சத்ருஜித், ஹரிச்சந்திரன், மார்க்கண்டேயர், ரத்னாவளி, கண்டு பிடித்தல், கோனேரி அரசகுமாரன், சந்தையிற் கூட்டம், வைகுண்ட வைத்தியர், தீட்சிதர் கதைகள், ஹாஸ்யக் கதைகள், குறமகள், நல்லதங்காள், சிறுகதைகள், நடிப்புக்கலையில் தேர்ச்சிபெறுவதெப்படி?, முதலியன.

முதற் பதிப்பு

சென்னை 'பியர்லெஸ்' அச்சுக்கூடத்தில்
அச்சிடப்பட்டது.

2.00

1937

காபிரைட்] [விலை

INSCRIBED

to

THE BELOVED MEMORY

of

MY PARENTS

**P. VIJIARANGA MUDALIAR**

and

**P. MANICKAVELU AMMAL**

and

MY FRIEND

**C. RANGAVADIVELU**

# ஹாஸ்ய வியாசங்கள்

## சென்னை விநோதங்கள்

சென்ன பட்டணம் இந்தியாவில் மிகவும் குறைந்த நாகரீகமுடைய நகரமென்று, கல்கத்தா பம்பாயிலுள்ள ஜனங்கள் ஏளனம் செய்கிறதாகக் கேள்விப்பட்டேன். இவ் விழிசொல் ஏற்றதா, இல்லையா, என்று பார்க்கும் பொருட்டுச் சென்னையிலுள்ள அநேக இடங்களைச் சுற்றிப் பார்த்து வந்தேன். முடிவில், "அவ் விழிசொல் சென்னைக்கு ஏற்றதல்ல; சென்னையிலுள்ள சில விஷயங்கள் கல்கத்தா, பம்பாய் முதலிய இடங்களில் இல்லை" என்கிற தீர்மானத்திற்கு வந்தேன். அவைகளில் சிலவற்றைப்பற்றி அடியில் எழுதுகிறேன்.

சென்னையில் பீபில்ஸ் பார்க்கில் ஒரு பக்கம் "ராயல் பாத்" என்கிற பெயரையுடைய ஒரு கட்டிடமுண்டு. அது 1922-ம் வருஷம் ஒரு சீமானுடைய நன் கொடையால் கட்டப்பட்டதாம். அது சென்னைவாசிகள் நீந்திக் குளிக்கும்படியாகக் கட்டப்பட்டது. இதில் விசேஷமென்ன வென்றால் ஜனங்கள் நீந்திக் குளிப்பதற்காக எல்லா சௌகரியங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன; குளித்தவுடன் உடம்பை உலர்த்திக் கொள்வதற்காகவும், ஆடை அணிவதற்காகவும் அறைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன; நீந்தக்கற்போர்களுக்கு அபாயமில்லாதபடி ஒரு பக்கம் கொஞ்சம் ஆழமில்லாமலும், போகப் போக ஆழம் அதிகமாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது; ஆனால் ஒன்றுதான் குறைவாயிருக்கிறது.—இந்தக் குளிக்கும் இடத்தில் தண்ணீர்தான் கிடையாது! பம்பாய் கல்கத்தா முதலிய பட்டணங்களைப்பற்றிப் புகழ்ந்து பேசும் ஜனங்களில் யாராவது அவ்விடங்களில் தண்ணீரில்லாத குளிக்குமிடங்

கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா என்னும் கேள்விக்குப் பதில் கூறட்டும். ஏறக்குறைய இந்தியா முழுவதிலும்—ஏன், இவ்வுலக முழுவதிலும்—ஜலமில்லாத ஸ்நான கட்டம் கிடைப்பது அரிது என்றே சொல்லவேண்டும். இந்த அருமையான பெருமை நம்முடைய சென்னைக்குத்தான், எனக்குத் தெரிந்தவரையில், உரித்தானது! சிலர், நீந்தக் கற்றுக்கொண்ட பிறகுதான் ஜலத்தில் இறங்குவோம், என்று கூறக் கேட்டிருக்கிறேன். அப்படிப் பட்டவர்களுக்காக இந்த ஸ்நான கட்டம் கட்டப்பட்டதோ என்னமோ? அப்படியானால் முனிஸிபல் சாமான்களை யெல்லாம் இங்கு நிரப்பி வைப்பானேன்? இந்தக் கேள்விக்குப் பதில் இதை வாசிக்கும் நண்பர்கள் தான் கூறவேண்டும்.

(சமீபத்தில்தான் இந்தக் கட்டிடம் நீந்திக் குளிக்கத் திறந்து விடப்பட்டிருக்கிறது.)

பாரீஸ் வெங்கடாசல ஐயர் வீதியில் சுமார் 50,000 ரூபாய் வரையில் செலவழித்துக்கட்டப்பட்ட ஒரு கட்டிடம் இருக்கிறது. சில வருடங்களுக்கு முன்பாகச் சென்னை கவர்னர் ஒருவருடைய பத்னி அக்கட்டிடத்தைத் திறந்து வைத்தார்கள். அச்சமயம் இப்பெருங் கட்டிடமானது சென்னையில் ஜவுளி வியாபாரம் செய்ய உபயோகப்படும்படியாகக் கட்டப்பட்டது; கிடங்குத் தெருவில் இதற்குப்போதுமான வசதியில்லை, இந்தியாவில் மற்றுமுள்ள தலை நகரங்களில் இருப்பதுபோல சென்னையிலும், ஒரே கட்டிடத்தில் பலவித ஜவுளிகள் விற்பனை செய்ய ஏற்பாடு செய்தல் நலமெனக் கருதி, இதற்கென்று ஒரு கம்பெனி ஏற்படுத்தி, இதைக் கட்டி முடித்தார்கள். இதற்கு 'பீஸ்-கூட்ஸ் மார்க்கெட்' (Piece-goods Market) என்று பெயர் வைத்தார்கள். இது திறக்கப்பட்டுப் பல வருஷங்களாகியும் இவ்விடத்தில் ஜவுளி வியாபாரம் நடக்கவே யில்லை! இப்பெரிய கட்டிடத்தில் பல அறைகள் இருந்தபோதிலும் ஒன்றிலாவது ஜவுளிகள் இன்றளவும் வைக்கப்படவில்லை! ஆனால் அதற்குப் பதிலாக சில சவுக்குக் கட்டை டெப்போக்கள் இருக்கின்றன! நான் எவ்வளவோ யோசித்துப் பார்த்தேன்—ஜவுளிகளுக்கும் சவுக்குக் கட்டைகளுக்கும் ஏதாவது சம்பந்தமுண்டா

என்று. பூர்வ காலத்தில் நமது தேசத்திய ரிஷிகள் சில மரப் பட்டை களினின்றும் நார்களை எடுத்து மரவுரிகள் செய்து உடுத்திக்கொண்ட தாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆயினும் சவுக்குக் கட்டைகளி லிருந்து எப்பொழுதாவது மரவுரிகள் செய்ததாகத் தெரியவில்லை. ஆகவே சவுக்குக் கட்டைகள் விற்கும் ஜவுளி மார்க்கெட் என்பது உலகத்திலில்லாத விஷயமல்லவா? இந்த மார்க்கெட்டை முன் னின்று கட்டினவர் ஒரு வடக்கத்திய ஆசாமி என்று கேள்விப்படு கிறேன். அவர் இப்பொழுது சென்னையிலில்லை. வேறு எந்த ஊரிலிருக்கிறாரோ தெரியாது. எந்த ஊரில் இருந்தபோதிலும் அந்த ஊரில் இம்மாதிரியான "ஜவுளி" மார்க்கெட் கட்டாமலிருக் கும்படியாக நான் அவரை வேண்டிக்கொள்ளுகிறேன்.

சென்னையில் பச்சையப்பன் கல்லூரிக்கு எதிரில் ஒரு கட்டிட மிருக்கிறது; இதற்கு "கார்ப்போரேஷன் பழக்கடை" என்று பெயர். இது சில வருஷங்களுக்கு முன்பாக, "பழங்களையெல்லாம் வீதி களில் விற்பது தகுதியல்ல, ஆகவே பம்பாய் கல்கத்தா முதலிய பட்டணங்களிலிருப்பதுபோல் ஒரு தனிக் கட்டிடமிருக்கவேண் டும்", என்று நமது சென்னைக் கார்ப்பொரேஷன் கவுன்ஸிலர்கள் கட்டின இடமாகும். இதன் வாயில் வழியாக நீங்கள் நுழைந்தால் முதல் முதல் உங்கள் கண்களுக்குப் புலப்படும் 'பழ' தினுசுகள் அடியிற் குறித்தனவாம்:—துணிகள், செம்புகள், பாய்கள், பொம் மைகள், பந்தாடும் கருவிகள், கட்டில்கள், புஸ்தகங்கள், கொசுவலைகள், கம்பளிகள் முதலியவை. இவை எந்த மரங்களில் காய்த்துப் பழுக்கின்றனவோ, என்னால் கூறமுடியாது. கார்ப்பொ ரேஷன் கவுன்ஸிலர்களில் யாராவது தாவர சாஸ்திரப் பரீட்சை யில் தேறினவர்களாயிருந்தால் அவர்கள் ஒருவேளை இதற்குத் தகுந்த பதில் அளிக்கலாம். இப்படிப்பட்ட பழக்கடைகள் இந்தியா முழுதும் வேறு எந்த இடத்திலும் கிடைப்பது அரிதென்றே நாம் கூற வேண்டும்.

சென்னை வாசிகள் திருவல்லிக்கேணி பீச்சிலிருந்து வடக்கே கடற்கரை யோரமாய்ப் போனால், அங்கே இரும்பு வாராவதிக் கரு கில் சிமிட்டியினால் கட்டப்பட்ட பலமான கட்டிடம் ஒன்றைக்

கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா என்னும் கேள்விக்குப் பதில் கூறட்டும். ஏறக்குறைய இந்தியா முழுவதிலும் — ஏன், இவ்வுலக முழுவதிலும்—ஜலமில்லாத ஸ்நான கட்டம் கிடைப்பது அரிது என்றே சொல்லவேண்டும். இந்த அருமையான பெருமை நம்முடைய சென்னைக்குத்தான், எனக்குத் தெரிந்தவரையில், உரித்தானது! சிலர், நீந்தக் கற்றுக்கொண்ட பிறகுதான் ஜலத்தில் இறங்குவோம், என்று கூறக் கேட்டிருக்கிறேன். அப்படிப் பட்டவர்களுக்காக இந்த ஸ்நான கட்டம் கட்டப்பட்டதோ என்னமோ? அப்படியானல் முனிஸிபல் சாமான்களை யெல்லாம் இங்கு நிரப்பி வைப்பானேன்? இந்தக் கேள்விக்குப் பதில் இதை வாசிக்கும் நண்பர்கள் தான் கூறவேண்டும்.

(சமீபத்தில்தான் இந்தக் கட்டிடம் நீந்திக் குளிக்கத் திறந்து விடப்பட்டிருக்கிறது.)

பாரீஷ் வெங்கடாசல ஐயர் வீதியில் சுமார் 50,000 ரூபாய் வரையில் செலவழித்துக்கட்டப்பட்ட ஒரு கட்டிடம் இருக்கிறது. சில வருடங்களுக்கு முன்பாகச் சென்னை கவர்னர் ஒருவருடைய பத்னி அக்கட்டிடத்தைத் திறந்து வைத்தார்கள். அச்சமயம் இப்பெருங் கட்டிடமானது சென்னையில் ஜவுளி வியாபாரம் செய்ய உபயோகப்படும்படியாகக் கட்டப்பட்டது; கிடங்குத் தெருவில் இதற்குப்போதுமான வசதியில்லை, இந்தியாவில் மற்றுமுள்ள தலைநகரங்களில் இருப்பதுபோல சென்னையிலும், ஒரே கட்டிடத்தில் பலவித ஜவுளிகள் விற்பனை செய்ய ஏற்பாடு செய்தல் நலமெனக் கருதி, இதற்கென்று ஒரு கம்பெனி ஏற்படுத்தி, இதைக் கட்டி முடித்தார்கள். இதற்கு 'பீஸ்-கூட்ஸ் மார்க்கெட்' (Piece-goods Market) என்று பெயர் வைத்தார்கள். இது திறக்கப்பட்டுப் பல வருஷங்களாகியும் இவ்விடத்தில் ஜவுளி வியாபாரம் நடக்கவேயில்லை! இப்பெரிய கட்டிடத்தில் பல அறைகள் இருந்தபோதிலும் ஒன்றிலாவது ஜவுளிகள் இன்றளவும் வைக்கப்படவில்லை! ஆனால் அதற்குப் பதிலாக சில சவுக்குக் கட்டை டெப்போக்கள் இருக்கின்றன! நான் எவ்வளவோ யோசித்துப் பார்த்தேன்—ஜவுளிகளுக்கும் சவுக்குக் கட்டைகளுக்கும் ஏதாவது சம்பந்தமுண்டா

என்று. பூர்வ காலத்தில் நமது தேசத்திய ரிஷிகள் சில மரப் பட்டைகளினின்றும் நார்களை எடுத்து மரவுரிகள் செய்து உடுத்திக்கொண்டதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆயினும் சவுக்குக் கட்டைகளிலிருந்து எப்பொழுதாவது மரவுரிகள் செய்ததாகத் தெரியவில்லை. ஆகவே சவுக்குக் கட்டைகள் விற்கும் ஜவுளி மார்க்கெட் என்பது உலகத்திலில்லாத விஷயமல்லவா? இந்த மார்க்கெட்டை முன்னின்று கட்டினவர் ஒரு வடக்கத்திய ஆசாமி என்று கேள்விப்படுகிறேன். அவர் இப்பொழுது சென்னையிலில்லை. வேறு எந்த ஊரிலிருக்கிறாரோ தெரியாது. எந்த ஊரில் இருந்தபோதிலும் அந்த ஊரில் இம்மாதிரியான "ஜவுளி" மார்க்கெட் கட்டாமலிருக்கும்படியாக நான் அவரை வேண்டிக்கொள்ளுகிறேன்.

சென்னையில் பச்சையப்பன் கல்லூரிக்கு எதிரில் ஒரு கட்டிடமிருக்கிறது; இதற்கு "கார்ப்போரேஷன் பழக்கடை" என்று பெயர். இது சில வருஷங்களுக்கு முன்பாக, "பழங்களையெல்லாம் வீதிகளில் விற்பது தகுதியல்ல, ஆகவே பம்பாய் கல்கத்தா முதலிய பட்டணங்களிலிருப்பதுபோல் ஒரு தனிக் கட்டிடமிருக்கவேண்டும்", என்று நமது சென்னைக் கார்ப்பொரேஷன் கவுன்ஸிலர்கள் கட்டின இடமாகும். இதன் வாயில் வழியாக நீங்கள் நுழைந்தால் முதல் முதல் உங்கள் கண்களுக்குப் புலப்படும் 'பழ' தினுசுகள் அடியிற் குறித்தனவாம்:—துணிகள், சென்டுகள், பாய்கள், பொம்மைகள், பந்தாடும் கருவிகள், கட்டில்கள், புஸ்தகங்கள், கொசுவலைகள், கம்பளிகள் முதலியவை. இவை எந்த மரங்களில் காய்த்துப் பழுக்கின்றனவோ, என்றால் கூறமுடியாது. கார்ப்பொரேஷன் கவுன்ஸிலர்களில் யாராவது தாவர சாஸ்திரப் பரீட்சையில் தேறினவர்களாயிருந்தால் அவர்கள் ஒருவேளை இதற்குத் தகுந்த பதில் அளிக்கலாம். இப்படிப்பட்ட பழக்கடைகள் இந்தியா முழுதும் வேறு எந்த இடத்திலும் கிடைப்பது அரிதென்றே நாம் கூற வேண்டும்.

சென்னை வாசிகள் திருவல்லிக்கேணி பீச்சிலிருந்து வடக்கே கடற்கரை யோரமாய்ப் போனால், அங்கே இரும்பு வாராவதிக் கருகில் சிமிட்டியினால் கட்டப்பட்ட பலமான கட்டிடம் ஒன்றைக்

காண்பார்கள். அதன் பெயர் என்னவென்று விசாரித்தால் "கிளைவ் பாட்டரி" என்று அறிவார்கள். 'பாட்டரி' என்னும் ஆங்கில பதத்திற்கு 'பீரங்கிகள் வைக்குமிடம்' என்று இந்தச் சந்தர்ப்பத்தில் அர்த்தமாகும். இது நமது ராஜாங்கத்தால் சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்பாக, சென்னையை எதிரிகள் சமுத்திரத்தின் வழியாக எதிர்த்தால் அவர்களைத் தடுக்கவேண்டி ஏராளமான திரவியம் செலவழித்துக் கட்டப் பட்டதாகும். கட்டிடம் மிகவும் பலமானது; எல்லாம் சரியாகத்தா னிருக்கிறது:—பீரங்கி மாத்திரம் தான் இல்லை!

இதற்கு காரணம் என்னவென்று விசாரித்ததில், ராஜாங்க ராணுவ உத்தியோகஸ்தர்கள் இந்தப் பீரங்கிகளை மாத்திரம் வெளியே எந்த ஊருக்கோ எடுத்துக்கொண்டு போய்விட்டார்களாம்! கட்டிடம் மாத்திரம் காலியாகவே இருக்கிறது. ஆயினும் கட்டிடம் ஒன்றிற்கும் உபயோகப் படாமற் போகவில்லை. சில வேலை யாட்களும், அவர்கள் குடும்பங்களும் இங்கே வசித்து வருகிறார்கள். 1915-ம் வருஷத்தில் ஐரோப்பிய மகா யுத்தத்தில் "எம்டன்" என்னும் கப்பல் சென்னையைத் தாக்கியபோது இந்த கிளைவ் பாட்டிரியிலிருந்து ஆடவரும் பெண்களும் குழந்தைகளும் அக்கம்பக்கலிலிருந்து வந்த குண்டுகள் தங்கள்மேல் படாதபடி, உள்ளே ஒளிந்திருக்க மிகவும் உபயோகப் பட்டதாகக் கேள்விப் பட்டேன். ஏறக்குறைய நூற்றெண்பது வருடங்களுக்குமுன் சென்னையில் கவர்னரா யிருந்த லார்ட் க்ளைவ் என்பவர் தன் பெயரால் சென்னையில் கட்டப்பட்ட ஒரு "பாட்டரி" யானது தற்காலம் மேற்கண்டபடி உபயோகப் படுகிறதென்று தம் சூட்சும தேகத்தோடு கேள்விப் பட்டால், உடல் சிலிர்ப்பார் என்றே நினைக்கிறேன்.

அப்படியே கடற்கறையோரமாகவே இன்னும் வடக்கே நோக்கிப் போவீர்களானால், சென்னை கஸ்டம் ஹவுஸுக்கு எதிராக, ஒரு கட்டிடத்தைக் காண்பீர்கள். அதன் எட்டு வாயில்களிலும் "கார்ன் வாலிஸ்" என்று பெரிய எழுத்துகளால் எழுதப்பட்டிருப்பதைக் காணலாம். லார்ட் கார்ன்வாலிஸ் என்பவர் இந்தியாவில் பல வருஷங்களுக்கு முன் கவர்னராக இருந்த சீமான். ஆகவே இக் கட்டி-

டத்திற்குள்ளாக அவரது சிலை உருவம், அவருடைய ஞாபகார்த்தமாக வைக்கப்பட்டிருக்கிறது என்று நீங்கள் எண்ணலாம். ஆயினும் இந்த எட்டு வாயில்களுக்குள் ஏதாவது ஒன்றின் வழியாக நீங்கள் உள்ளே சென்று பார்ப்பீர்களானல் கார்ன்வாலிஸ் சிலை உருவம் ஒன்றையும் காணமாட்டீர்கள்! அதற்குப் பதிலாகத் தண்ணீர் தொட்டி மாதிரி ஒன்று இக்கட்டிடத்தின் நடுவில் கட்டியிருப்பதையே காண்பீர்கள். அதிலும் தண்ணீர் கிடையாது! பிறகு நான் விசாரித்ததில், லார்ட் கார்ன்வாலிஸின் சிலை சென்னை மியூஸியத்தில் வைக்கப்பட்டிருப்பதாக அறிந்தேன். ஒருவருடைய சிலையை ஓரிடத்திலும், வைக்கவேண்டிய கட்டிடத்தை வேறொரு இடத்திலும் வைக்கும் விந்தையானது நமது சென்னைமா நகருக்குத்தான் உரித்தானது.

சென்னையில் உள்ள ஒரு 'பார்க்' நீங்கள் கவனிக்கத் தக்கது. 'பார்க்' என்றால் பெரிய தோட்டம் என்று அர்த்தமாகும். அதிலும் சாதாரணமாகக் கல்கத்தா, பம்பாய் முதலிய இடங்களிலுள்ள பார்க்குகள் மைல் கணக்கான விஸ்தீரண முடையவை. அவற்றில் அழகிய புஷ்பச் செடிகளும், ஆகாயத்தை அளாவிய மரங்களும் நிறைந்திருக்கும். அன்றியும் சாதாரண ஜனங்கள் கண்டு களிப்பதற்காகக் காட்டு மிருகக் கூண்டுகளும், பட்சிக் கூடுகளும், நம் நாட்டிலில்லாத பாம்பு முதலியவைகளும் கூடுகளில் அடைக்கப் பட்டிருக்கும். அன்றியும் படகுகளில் ஜனங்கள் போகும்படியான நீர் நிலைகளும் அமைக்கப்பட்டிருக்கும். சென்னையில் பீபில்ஸ் பார்க்கை இதற்கு ஒரு உதாரணமாகக் கூறலாம். நிற்க.—

முதலில் கூறிய பார்க் எங்கே இருக்கிறதெனப் பெரும்பாலருக்குத் தெரியவே தெரியாது. இதைப் பார்க்க வேண்டுமென்றால் நீங்கள் ஒரு பூதக் கண்ணாடியை யெடுத்துக் கொண்டு செல்ல வேண்டும். திருவல்லிக்கேணியில் இது இருக்கிறது. இதன் பெயர் "கான்பகதூர் ஹாஜி ஹகீம் முகம்மது அப்துல் அஜீஸ் சாகிப் பார்க்!" மற்றப் பார்க்குகளெல்லாம் நான்கு அல்லது ஐந்து மைல் விஸ்தீரண மிருந்தால், இது நான்கு அல்லது ஐந்து அடி விஸ்தீரண முடையதா யிருக்கிறது! மற்ற விநோதப் பார்க்குகளி

லெல்லாம் நூற்றுக் கணக்காகப் பெரிய மரங்கள் வளர்ந்திருந்தால் இதில் ஆயிரக் கணக்கான புல் முளைத்திருக்கிறது. மற்றப் பூந் தோட்டங்களிலெல்லாம் புலி சிங்கங்கள் அடைக்கப்பட்டிருந்தால் இந்தத் தோட்டத்தில் ஆயிரக் கணக்கான எறும்புகள் எதேச்சையாகத் திரிகின்றன. நான் ஒரு முறை பார்த்தபோது இவ்வளவு பெரிய பார்க்கில், மற்ற பார்க்குகளில் உள்ளதுபோல் சங்கீதத்திற்கும் ஏன் ஒரு ஏற்பாடும் செய்யவில்லையென்று துக்கப்பட்டேன். மற்றொரு முறை அந்தப்பக்கம் போனபோது அக்குறையும் நீங்கியது. ஒரு ஹரிஜனப் பையன் இங்கே உட்கார்ந்துகொண்டு தப்பட்டை அடித்துக்கொண்டிருந்தான்! இந்தப் பார்க்கில் நீங்கள் முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், இந்தப் பார்க்கைவிட, இந்தப் பார்க்கின் பெயர் எழுதப்பட்டிருக்கும் போர்டு பெரிதாகத்தோன்றுவதேயாம்! அந்த போர்டைவிட அதில் எழுதப்பட்டிருக்கும் பெயர் பெரியதானது என்று யாராவது சொன்னால் அவர்களுடன் நான் சச்சரவிடமாட்டேன்!

இப்படிப்பட்ட விநோதங்களெல்லாம் இருக்கும்பொழுது சென்னையைப்பற்றி யார்தான் குறைகூறக் கூடும்?

## பத்து ரூபாய் டிக்கட்

இவ்வருஷம் எம். எஸ். எம். ரெயில்வே கம்பெனியார் இதுவரை இல்லாதபடி புதிய வழக்கமாய், பத்து ரூபாய்க்கு மூன்றாவது வகுப்பு டிக்கட்டு ஒன்று வாங்கினால், சென்னை முதல் விசாகப்பட்டணம் வரை, ஏறக்குறையத் தொளாயிரம் மைல், டிசம்பர் மாதம் 20-ந் தேதி முதல் ஜனவரி 15-ந் தேதி வரையில், எத்தனை முறை வேண்டுமென்றாலும் பிரயாணம் செய்யலாமென்றும், இடையில் எந்த ஸ்டேஷனில் வேண்டுமென்றாலும் ஏறி இறங்கலாமென்றும்,

மெயில் வண்டி, சாதாரண வண்டி, முதலிய எந்த வண்டியிலும் போகலாமென்று பிரகடனம் செய்திருந்தனர்.

மற்றவர்களைப்போல நானும் வால்டேரிலிருந்து சென்னை வரையிலும் போய்வரப் பத்து ரூபாய் டிக்கட் ஒன்று வாங்கினேன். இந்த டிக்கட் இருபதாந் தேதி முதல் செலாவணியாகுமாகையால், முதல் இரண்டு தினங்களில் எல்லோரும் புறப்படுவார்கள், மூன்றுவது தினம் புறப்பட்டால் அதிக ஜன நெருக்கம் இராது என்று எண்ணி 23-ந் தேதி ரெயிலேற விசாகப்பட்டணம் ஸ்டேஷனுக்குப் போனேன். அன்று ஸ்டேஷன் பிளாட்பாரம் முழுவதும் ஒரே ஜனமயமாயிருந்தது. எனக்குத் தெரிந்தவர்களை விசாரித்தபோது என்னைப்போலவே அவர்களும் முதல் இரண்டு தினங்களில் புறப்பட்டால் அதிக நெருக்கமாயிருக்குமென்று இரண்டு தினங்கள் கழித்துப் புறப்பட்டதாகத் தெரியவந்தது! ஊரிலுள்ள கோமுட்டிகளெல்லாம் ஒவ்வொருவரும் ஆழாக்குப் பால் கொண்டு வந்து ஒரு பெரிய உயர்ந்த மொடாவில் விடவேண்டுமென்று அரசனால் ஆக்கியாபிக்கப்பட்டபோது, ஒவ்வொரு கோமுட்டியும், "மற்றவர்களெல்லாம் பாலை வார்ப்பார்கள்; நாம் மாத்திரம் தண்ணீரைக் கொண்டுபோய்விட்டால் யாருக்குத் தெரியப் போகிறது?" என்று யுக்தி செய்த கதை அப்பொழுது எனக்கு ஞாபகம் வந்தது. நமக்குத் தோன்றுகிற யுக்தி மற்றவர்களுக்கும் தோன்றுமே யென்று சாதாரணமாக நாம் நினைக்கிறதில்லை.

அன்று கல்கத்தா மெயில் வரவேண்டிய மணிப்பிரகாரம் ஏன் வரவில்லை யென்று ஸ்டேஷன் மாஸ்டரைப் போய் விசாரித்தேன். அவர் "ஏன் ஸார்! இந்தக் கேள்வி கேட்பவர்களுக்கெல்லாம் நான் பதில் சொல்வதற்கு ஆயிரம் நாக்கு உடைய ஆதிசேஷன் போல் இருக்கவேண்டும். இந்தப் பிளாட்பாரத்திலிருக்கும் ஆண் பெண் ஒருவரில்லாமல் இக்கேள்வி கேட்டாயிற்று!" என்று கோபித்தார். அவரைச் சாந்தப்படுத்தி என்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டு மெல்ல விசாரித்ததில், "கல்கத்தா மெயில் ஒரு மணி நேரம் பொறுத்துத்தான் வரும். வழியில் இம்மாதிரியான மலிவு டிக்கட்டு

கள் வாங்குவோர் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் ஏறுவதால் மிகவும் தடைப்பட்டு விடுகிறது" என்றார்.

பதில் பேசாமல் அப்பால் சென்று பிளாட்பாரத்தில் ரெயிலேற என்னைப்போன்ற எத்தனை மேதாவிகள் இருக்கின்றனர் என்று சுமாராக எண்ணிப் பார்த்தேன். குறைந்த பட்சம் 500 ஜனங்களுக்கு மேலிருந்தனர். இவ்வளவு ஜனங்களும் அந்த மெயில் வண்டித் தொடருக்குள் எப்படி ஏறப் போகின்றனர் என்கிற கேள்வி என்னைப் பாதிக்க ஆரம்பித்தது. ஸ்டேஷன் மாஸ்டருக்குக் கிடைத்த தந்தியின்படி விஜய நகரம் வருமுன்னமே மெயில் நிறைந்திருந்ததாம். அந்த ஸ்டேஷனில் இறங்கினவர்கள் இருபது முப்பது பேர்கூட இராதாம். அந்த ஸ்டேஷனிலிருந்த ஐந்நூறு பெயர்களும் எப்படி அந்த மெயிலுக்குள் ஏறினார்கள் என்பது தான் கேள்வி. பதில் என்றால் கூற முடியாது. அந்த இரகசியம் அந்த மெயில் வண்டித் தொடருக்குத்தான் தெரியும் போலும்! ரெயில் விசாகபட்டணம் ஸ்டேஷனுக்கு வந்த பிறகு அந்த வண்டித் தொடரிலுள்ள ஒவ்வொரு வண்டியிலிருந்தும் ஒன்றிரண்டு பேர் இறங்கினால், அவர்களுக்குப்பதிலாகப் பத்துப் பன்னிரண்டு பேர்கள் ஏறினார்கள்! இது எப்படி சாத்தியம் என்று என்றால் சொல்ல முடியாது. நான் எப்படி ஏறினேன் என்று என்றால் சொல்ல முடியாது. நான் வண்டிக்குள் எப்படி ஏறினேன் என்று இப்பொழுது நினைத்துப் பார்த்தாலும் எனக்கு ஞாபகமில்லை. கும்பலைத் தாண்டி வண்டியில் நுழைந்தேனோ, அல்லது கும்பல் என்னைத் தள்ளிக்கொண்டு போய் வண்டிக்குள் விட்டதோ என்று எனக்கே சந்தேகமாயிருக்கிறது.

புறப்படவேண்டிய காலத்திற்கு அரைமணி கழித்து ரெயில் வண்டி புறப்பட்டது. புறப்பட்டவுடன் வெளியில் பிளாட்பாரத்தில் எத்தனை ஜனங்கள் இடம் அகப்படாமல் நின்றுபோய் விட்டார்களோவென்று பரிதாபப்பட்டு என் தலையை நீட்டிப் பார்த்தால், பிளாட்பாரத்தில் டிக்கெட் கலெக்டரும் போர்ட்டர்களும் தவிர ஒருவரையும் காணவில்லை!

ரெயில் புறப்பட்டவுடன் நான் ஏறிய வண்டியில் யார் யார் இருக்கிறார்களென்று தெரிந்து கொள்வதற்காக நாலா பக்கமும்

திரும்பிப் பார்த்தேன். முதலில் கண்ணுக்குத் தென்பட்ட தென்ன வென்றால் அந்த வண்டியில் "இதில் பத்துபேர் உட்கார இட முண்டு" என்று ஆங்கிலத்திலும், தமிழிலும், தெலுங்கிலும், இந்துஸ்தானியிலும் எழுதப்பட்டிருந்ததேயாம். உடனே இந்த வண்டியில் எத்தனை பெயர்கள் ஏறி யிருக்கிறார்கள் என்று கணக்கிட, பெரியவர்கள் 32-பேரும் குழந்தைகளில் 15-ம் இருந்தனர். குறித்த தொகைக்குமேல் ஒவ்வொரு வண்டியிலும் இம்மாதிரியாக நாலு மடங்கு ஜனங்களை ஏற்றியதற்காக ரெயில்வேக் காரர்களுக்கு அபராதம் போடுவதானால் இந்தப் பத்து ரூபாய் டிக்கட்டு விற்றதினால் அவர்களுக்கு வந்த லாபத்தை யெல்லாம் அவர்கள் அபராதமாய்க் கட்டவேண்டி வரும் என்பதற்கு ஐயமில்லை. (இந்தப் பத்து ரூபாய் டிக்கட்டு 40,000 விற்றதாகக் கேள்விப்படுகிறேன்.)

சில நிமிஷங்களுக் கெல்லாம் ரெயில் வேகமாய்ப் போக, வண்டிக்குள் கொஞ்சம் காற்று வீச ஆரம்பித்தது. அதனால் சிறிது ஆனந்தமடைந்தவனானேன். "சும்மா காலம் கழிப்பானேன்; நம்மோடு வண்டியிலிருப்பவர்களுடன் ஏதாவது பேசிக்கொண்டு போனால் கொஞ்சம் கஷ்ட நிவாரணமாயிருக்கும்" என்று எண்ணி, அந்த வண்டியிலிருந்தவர்களை யெல்லாம் ஏறக்குறைய ஒவ்வொருவராக "நீங்கள் எங்கே போகிறீர்கள்?—நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று பிரயாணிகள் வழக்கப்படி கேட்க ஆரம்பித்தேன். இந்த விசாரணையின் முடிவில் பெரும்பாலோர் என்னைப்போல் சென்னைக்குப் போவதாக தெரிவித்தார்கள். பன்னிரண்டு பெயர்கள் மாத்திரம் கூடூரில் இறங்குவதாகச் சொன்னார்கள். சரி, இப் பன்னிரண்டு பெயர்களும் கூடூரில் இறங்கினால் பிறகு நமக்குக் கொஞ்சம் சௌகரியமுண்டாகு மென்று நினைத்து, அந்தக் கூடூர் ஸ்டேஷனுக்கு எப்பொழுது ரெயில் போய்ச் சேருகிறது என்று ரெயில்வே கால அட்டவணையை எடுத்துப் பார்க்க, மறுநாள் காலை போய்ச் சேருவதாகத் தெரிய வந்தது! என்னையும் மற்றெல்லோரையும் அது வரையில் காப்பாற்றும்படியாகக் கடவுளைப் பிரார்த்தித்தேன். இந்தப் பிரார்த்தனை செய்யும் ஆனந்தத்தை எனக்கு ஜன்மத் துவேஷிகள் யாராவது இருந்தால் அவர்களும் அனுபவிக்க வேண்டாமென்று கோருவேன்.

இன்னொரு ஆனந்தம் என்னவென்றால், ஒவ்வொரு ஸ்டேஷனில் நிற்கும் பொழுதும் அங்கே பத்து ரூபாய் டிக்கெட்டு வாங்கினவர்கள் வண்டிக்குள் ஏறப் பார்ப்பதும் வண்டியிலுள்ளவர்கள் உள்ளே இடமில்லையென்று அவர்களைப் பிடித்துத் தள்ளுவதுமே. இந்தச் சண்டையின் சங்கீத கோஷம் மனதுக்கு மிகவும் இனிமையாயிருந்தது. இச் சண்டையின் மத்தியில் ஒரு விநோதம் நேரிட்டது. நான் உட்கார்ந்த இடத்திற்கு மேலாகச் சாமான்கள் வைக்க இடம் ஏற்பாடு செய்திருந்தது. அந்த இடம் சிறிதாயிருந்தபோதிலும் அதிலாவது கொஞ்சம் படுத்துறங்கலாமென்று மேலே நிமிர்ந்து பார்க்க, எனக்கு முன்பே அங்கொருவர் படுத்திருந்தார்! சரி, அவர் அதிர்ஷ்டசாலி யென்று நினைத்து அந்த யோசனையை விட்டேன். ஆனால் அவருடைய அதிர்ஷ்டம் இராஜமகேந்திரம் வரையில்தா னிருந்தது! அந்த ஸ்டேஷனில் வழக்கப்படி, ஸ்டேஷன் பக்கமாக ஏராளமான ஜனங்கள் எங்கள் வண்டியில் ஏறப் பார்க்க, உள்ளே இருந்தவர்கள் அவர்களை ஏறாம லிருக்கும்படி சண்டை போடுகிற தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள். அச்சமயம் சாமான்கள் வைக்க வேண்டிய இடத்தில் படுத்துக் கொண்டிருந்த மேற் சொன்னவரும் எழுந்து உட்கார்ந்து வண்டியில் ஏறப் பார்த்தவர்களைத் திட்டிக் கொண்டிருந்தார். இச் சந்தர்ப்பத்தில் மிகுந்த புத்திசாலியான ஒருவர் (அவர் ஒரு முஸ்லிம்) வண்டியின் பின்புறமாக ஏறி, நாங்கள் எல்லாம் ஸ்டேஷன் பக்கம் பார்த்துக்கொண்டிருந்த பொழுது, மேலே உட்கார்ந்திருந்தவர் இடத்தில் படுத்துக் கொண்டார்! வண்டி புறப்பட்டவுடன் முதலில் படுத்திருந்தவர் தன் இடத்தைத் திரும்பிப் பார்க்க, வேறொரு ஆசாமி அங்கே படுத்துக்கொண்டிருப்பதைக் கண்டார்! உடனே அவருக்குக் கோபம் பிறந்து மற்றவரை அதட்டி எழுப்பிப் பார்த்தார். அந்த ஆசாமி எழுந்திருக்கவில்லை. உடனே ஒருவரை யொருவர் அவரவர்கள் பாஷையில் திட்ட ஆரம்பித்தனர். தெலுங்கு பாஷை சாயபுவுக்குத் தெரியாது. இவருக்கோ அவரது இந்துஸ்தானி பாஷை தெரியாது. முடிவில் இருவரும் கைகலப்பார்கள் போலிருந்தது. அச்சமயம் என் வண்டியில் யாருக்காவது இந்துஸ்தானி தெரிந்திருந்தால் அந்த முஸ்லிமிடம் சொல்லி இருவரையும் சமாதானப்

படுத்துப்படி கேட்டுக் கொண்டேன். என் எதிரில் உட்கார்ந் திருந்த ஒருவர் தனக்கு இந்துஸ்தானி நன்றாய்த் தெரியுமென்று சொல்லி அவருடன் பேச ஆரம்பித்தார்.

அவரது இந்துஸ்தானி பாண்டித்யம் அடியிற் கண்டவாறு:— "சாயபு! தும் எந்துகு ஆமனுஷி சோடுலோ பண்டுகொண்டிவி!" என்று கேட்டார். இதைக்கேட்டவுடன் நமக்கே இந்துஸ்தானி இதைவிட நன்றாய்த் தெரியும் போலிருக்கிறதே என்று எண்ணி, என் கொச்சை இந்துஸ்தானியினால் சாயபுவைச் சாந்தப் படுத்தி; அவர் அவ்விடம் உட்காரவும், ஆந்திர தேசத்தார் காலை மடக்கிக் கொண்டு படுக்கவும், ஏற்பாடு செய்தேன்.

இரவெல்லாம் வண்டியிலிருந்தவர்களில் ஒருவராவது தூங்க வில்லை. எனக்கிருந்த வருத்தமெல்லாம் அன்றிரவு முக்கோடி ஏகாதசியா யில்லாமற் போயிற்றே என்று தான். இருந்தால் வண் டியில் கண் கொட்டாமல் இரவெல்லாம் விழித்திருந்த எங்களுக் கெல்லாம் மிகவும் புண்ணியம் கிடைத்திருக்கும்!

வழியில், ஏதோ ஒரு ஸ்டேஷனில் மேலே உட்கார்ந்திருந்த முஸ்லிம் இறங்க, அவருக்குப் பதிலாக எங்கள் வண்டியில் மூன்று பேர் ஏற ஆரம்பித்தனர். அவர்களில் ஒருவர் இடையர் போலும் அவர் சாயபுவையும் மீறிக்கொண்டு வண்டிக்குள் நுழைந்து தாம் தூக்கிக் கொண்டுவந்த பானையைச் சாமான்கள் வைக்குமிடத்தில் வைத்துவிட்டு நின்றுகொண்டிருந்தார். அவர்கள் வெளியில் போட்ட சண்டையில் அப் பானை கொஞ்சம் உடைந்து விட்டதுபோ லிருக்கிறது. ரெயில் புறப்பட்டதும் அதிலிருந்த மோர் மெல்ல ஒழுக ஆரம்பித்தது! சொட்டு சொட்டென்று கீழே என் பக்கத் திலிருந்தவர் வாயில் விழ ஆரம்பித்தது. அவர் (பாவம்!) வாயைத் திறந்துகொண்டு தூங்கும் சுபாவமுடையவர் போலிருக்கிறது. "ஏமையா இதி!" என்று கூச்சலிட்டுக்கொண்டு அவர் எழுந்திருக் கையில் தலையை மேலே மோதிக்கொண்டார். அந்த அதிர்ச்சி யில் அங்கிருந்த பானை நன்றாய் உடைந்து மோர் எல்லாம் அவர் தலையில் அபிஷேகம் செய்வதுபோல் விழுந்தது! அம்மட்டும் அந்த

அபிஷேகம் நமக்குக் கிடைக்காமல் தப்பினோமே என்று ஆனந்தப் பட்டேன்.

இந்தப் பத்து ரூபாய் டிக்கட்டினால் நான் அடைந்த மற்றொரு ஆனந்தத்தைக் கூறி இதை முடிக்கிறேன். பெஜவாடா ஸ்டேஷனில் அவ்வூர் ஸ்டேஷன் மாஸ்டர் சிபாரிசு செய்ய, ஓர் ஆளை எங்கள் வண்டிக்குள் ஏற விட்டோம். ஓர் ஆள்தானே, போனால் போகிறான் என்று நாங்கள் முன்பிருந்ததை விடக் கொஞ்சம் நெருங்கி உட்கார்ந்துகொண்டு, புதிதாய் வந்த மனிதனுக்கு இடம்விட, அவன் உட்கார்ந்த பின், போர்ட்டர் ஒருவனிடம் சொல்லித் தன் சாமான்களைக் கொண்டுவரச் செய்து, அவைகளையெல்லாம் வண்டியில், சந்து பொந்திலெல்லாம் நிரப்பினான்! ஆளை உள்ளே விட்ட பின் அவன் சாமான்களை எப்படி வேண்டாமென்று சொல்வது? அவன் கறிகாய் வியாபாரியாம். அவன் கொண்டுவந்த மூட்டைகளில் ஒன்று கத்தரிக்காய் மூட்டை! அதை மாத்திரம் மற்றவர்கள் மிதித்துவிடப் போகிறார்களே யென்று தன் மடி மீது வைத்துக் கொண்டான். நெல்லூர் ஸ்டேஷனில் அம் மூட்டையைத் தான் உட்கார்ந்திருந்த விடத்தில் வைத்துவிட்டு ஒரு காரியமாகக் கொஞ்சம் வெளியே போகவேண்டுமென்று கூற, நான், "அப்படிச் செய்யாதே; போனால் இடம் போய்விடும்" என்று சொன்னேன். அப்படிச் சொல்லியும் கேட்காமல் இறங்கிப்போனான். அச்சமயம் அந்த இடம் காலியா யிருக்கிறதென்று எண்ணி, ஒரு ஸ்தூல சரீரமுடைய ஆள் வண்டிக்குள் ஏறி அஜாக்கிரதையாக அம் மூட்டையின்மீது உட்காரவே, கத்தரிக்காய்களெல்லாம் 'சட்னி' யாகப் போயின. உடனே மூட்டையின் சொந்தக்காரன் வந்து பார்க்க, தன் இடமும் போய்க் கத்தரிக்காயும் சட்னியாய்ப் போனதைக் கண்டு கூக்குரலிட ஆரம்பித்தான். பிறகு நான் அவனைப் பார்த்து, "போனால் போகிறது, கத்தரிக்காய்த் துகையலாகச் சுலபமாகச் செய்து சாப்பிட்டு விடலாம்; நன்றாக இருக்கும்" என்று சமாதானம் செய்தேன். அதனால் அவன் சமாதானம் அடைந்தானோ என்னவோ, எனக்குத் தெரியாது. மற்றவர்களெல்லாம் இதைக் கேட்டுச் சிரித்து ஆனந்தம் அடைந்தார்கள்.

எங்கள் ரெயில் அன்று பதினொரு மணிக்குச் சென்னைவந்து சேர்ந்தது—அதாவது சரியான நேரத்திற்கு இரண்டரை மணி நேரம் கழித்து! அதை விட்டு இறங்கும்போது, "பத்து ரூபாய் டிக்கட்டினால் அடைந்த ஆனந்தம் போதும்; இனிமேல் ரெயில் காரர் இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் தக்கபடி ஏற்பாடு செய்யா விட்டால் இந்தப் பத்து ரூபாய் டிக்கட்டை இனி வாங்குவதில்லை" என்று தீர்மானித்துக்கொண்டு வீடு போய்ச் சேர்ந்தேன்.

# அதிர்வெடியூர் செவிடர்கள் கதை

அதிர்வெடியூர் என்று ஒரு ஊர் உண்டு. அதற்கு இப்பெயர் வாய்ந்ததற்கு ஒரு முக்கியமான காரணம், அவ்வூரிலுள்ளவர்களெல்லாரும் பெரும்பாலார் செவிடர்கள் என்பதாம். அதிர் வெடி போட்டால்தான் அவ்வூரிலுள்ள நல்ல வயது வாய்ந்தவர்களுக்கும் காது கேட்குமாம். அங்குள்ள கிழவர்களுக்கோ கேட்க வேண்டியதில்லை. கோயில் உற்சவங்களில் அதிர்வெடிபோட்டால் பக்கத்தில் நின்றுகொண்டு, அதிர்வெடிபோட்ட புகையைப் பார்த்து 'இதென்ன புகைகிறதே' என்று கேட்பார்களாம்!

இப்படிப்பட்ட ஊரில் ஒரு பிராம்மணன் ஒரு ஏரிக்கரையோரம் உட்கார்ந்துகொண்டு மாத்யான்னிகம் (மத்தியானத்தில் செய்யவேண்டிய மந்திரஜபம்) செய்துகொண்டிருந்தான். அதற்கருகாமையிலுள்ள பள்ளத்தாக்கில் தன் ஆட்டுமந்தையை மேய்த்துக்கொண்டிருந்த ஒரு செவிட்டு இடையன், மத்யானமாகியும் வழக்கப்படி, தன் தாயார், தனக்குக் கஞ்சிகொண்டு வராதபடியால், பசி அதிகப்பட்டுத் தாளானாகி, வீட்டுக்குப்போய் கஞ்சி குடிக்க விரும்பினவனாய், அதுவரையில் தன் மந்தையை யார் பார்த்துக் கொண்டிருப்பது என்று யோசித்தவனாய், சுற்றிப்பார்த்து மாத்தியான்னிகம் செய்துகொண்டிருந்த பிராம்மணனிடம் போய் "ஐயரே,

இந்த ஆட்டுமந்தையை நான் வீட்டுக்குப் போய்வரும் வரையில் கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள் தயவு செய்து" என்று சொன்னான். நமது பிராம்மணன் ஜெபம் செய்யும் சமயம்; அதினும் முன்னமே குறித்தபடி முழுச் செவிடு; ஆகவே இடையன் சொன்னதைக் கேளாமல் தான் ஜபம் செய்து கொண்டிருந்தான். அப்படி ஜெபம் செய்யும் பொழுது கையால் ஜலத்தை எடுத்துப் புரோட்சணம் செய்யவேண்டிய கையைச் சுற்ற, இடையன் இதை 'அப்படியே ஆகட்டும், நீ வீட்டுக்குப் போய்வா,' என்று சொல்கிறார் சைகையினால், என்று நினைத்துக்கொண்டு தன் வீட்டிற்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டு, திரும்பி வந்தான். திரும்பிவந்து தன் ஆட்டுக் கூட்டத்தை எண்ணிப்பார்த்து சரியாக இருக்கக்கண்டு சந்தோஷித்தவனாய், அந்த பிராமணனுக்கு ஏதாவது கொடுக்கவேண்டுமென்று நினைத்து, தன் மந்தையிலிருந்த இடது கால் கொஞ்சம் ஒடிந்த ஒரு ஆட்டுக்குட்டியைத் தூக்கிக்கொண்டுபோய் பிராமணன் எதிரில் வைத்து, "சாமி, இத்தனை நேரம் என் மந்தையை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொண்டிருந்ததற்காக, இக்குட்டியை எடுத்துக் கொள்ளுங்கள் ; இது பெரியதானால் நன்றாய்ப் பால் கொடுக்கும்; கொஞ்சம் கால் நொண்டுகிறது என்று யோசியாதீர்கள்" என்று அதன் காலைக் காண்பித்தான். இவன் சொன்ன வார்த்தைகள் சற்றும் செவியிற் புகாத அந்த செவிட்டு பிராமணன், தான் தான் அவ்வாட்டுக்குட்டியின் காலை ஒடித்ததாக இடையன் கூறுகிறான் என்றெண்ணி, "நான் இதன் காலை ஒடிக்கவில்லையப்பா" என்று முதலில் சமாதானமாய்ச் சொல்லிப் பார்த்தான்.

செவிட்டு இடையன், பிராம்மணன் கூறுவதை அறியாதவனாய் "என்னசாமி, கொஞ்சம் நேரம்தானே என் மந்தையைப் பார்த்துக் கொண்டிருந்தீர்கள். இதற்கு இந்தக் குட்டியாடு போதாதா ? முழு ஆடு வேண்டுமா ? என்றால் துட்டு கொடுக்கமுடியாது" என்று கத்த ஆரம்பித்தான், அதன் பேரில் பிராமணன், "நான் காலை ஒடிக்கவில்லையென்று எத்தனை முறை சொல்வது ? இதற்கு நான் ஏன் துட்டு கொடுக்கவேணும்?" என்று கத்தினான். "இல்லை! எப்படியாவது நீங்கள் இந்த ஆட்டுக்குட்டியைத்தான் ஏற்றுக்கொள்ள

வேண்டும்" என்று இடையன் வற்புறுத்த, பிராமணன் "இதென்னடா! கஷ்டமாய் முடிந்தது! என்னையா சாப்பிட சொல்லுகிறாய் இந்த ஆட்டுக் குட்டியை! நான் பிராம்மணனடா! இதைத் தீண்ட மாட்டேனப்பா!" என்று உரக்கக் கூவினான். இவ்வாறு ஒருவன் சொல்லுவது மற்றொருவனுக்கு அர்த்தமாகாது, இருவரும் பெருங் கூச்சலுடன் சச்சரவிட்டுக்கொண்டு அதிர்வெடி யூருக்குத் திரும்பிவர, அச்சமயம் அவ்வூர் வைத்தியன் ஒருவன் (அவனும் செவிடு என்று நான் சொல்லவேண்டியதில்லை) எதிரில்வர, அவனிடம் போய் இருவரும் முறையிட்டார்கள். இடையன், "ஐயா! நீங்கள்தான் மத்யஸ்தமாகச் சொல்லுங்கள்; இவர் என் மந்தையைப் பார்த்துகொண்டிருந்ததெல்லாம் ஒரு நாழிகை கூட இராது. அதற்காக இந்த ஆட்டுக்குட்டியைக் கொடுத்தால் வேண்டாமென்கிறார். இதற்கென்னவோ கொஞ்சம் கால் ஒடிந்துதானிருக்கிறது. இவர் செய்த உபகாரத்திற்கு இது போதாதோ?" என்றான். பிராம்மணன், "ஐயா வைத்தியரே! நீங்கள் தான் மத்தியஸ்தம் சொல்லுங்கள். இந்த ஆட்டுக் குட்டியின் காலை நான் ஒடிக்கவேயில்லை. நான் பிராம்மணன். ஜீவஹிம்சையே செய்யமாட்டேன். என் மீது தப்பாக இவன் பிராது செய்கிறான். அன்றியும், இதன் காலை நீங்கள் ஒடித்தபடியால், நீங்கள்தான் இதைச் சாப்பிட வேண்டு மென்கிறான்! இதென்ன பிராரப்தமா யிருக்கிறது! நான் பிராம்மணன். ஆட்டுமாம்சத்தைத் தின்பதாவது! பாபம்! பாபம்!" என்றான். மத்யஸ்தராகக் கோரப்பட்ட செவிட்டு வைத்தியர், "பாபம் புண்ணியம் எல்லாம் பார்த்தால் எனக்கு முடியுமா? இந்த ஆட்டுக்குட்டிக்கு வைத்தியம் செய்ய எனக்குத் தெரியாதையா!" என்றார். தன்னை அந்த ஆட்டுக்குட்டியின் காலுக்கு சிகிச்சை செய்யவேண்டுமெனக் கேட்கிறார்கள் என்று நினைத்துக்கொண்டார்! கொஞ்சநேரம் இம்மூவர்களும் தாங்கள் சொன்னதையே சொல்லிக் கொண்டிருந்து, தங்கள் வியவகாரம் தீராதபடியால், அவ்வூர் தலையாரி வீட்டிற்குப்போய்ச் சேர்ந்தனர். அவனிடம் இம்மூவரும் தங்கள் தங்கள் கருத்தின்படி முறையிட்டனர். அத்தலையாரி பத்து நிமிஷம் வரையில் இவர்கள் கூக்குரலை யெல்லாம் கேட்டுவிட்டு "ஐயா, நீங்கள் மூவரும் எவ்வளவு சொன்னாலும் சரி, அந்தக் கழுதையின்

முகத்தில் நான் இனி விழிக்கவே மாட்டேன்" என்று கூறினார். அவர் முன்னாளிரவு தன் சம்சாரத்துடன் ஏதோ சச்சரவிட அந்த அம்மாள், கோபித்துக்கொண்டு, அவ்வூரின் ஒரு மூலையிலுள்ள தன் தாய் தந்தை வீடு போய்ச் சேர்ந்தாளாம். அங்கிருந்த தன் மாமனார், ஆட்டு இடையனிடம் ஒரு ஆட்டுக் குட்டியைப் பரிசாகக் கொடுத்து, தன் புரோகிதரையும், வைத்தியரையும் மத்யஸ்தமாக அனுப்பினார் என்று தலையாரி எண்ணிக்கொண்டார்! அவர்கள் மூவர் என்ன சொல்லியும், இவர் "என் பேச்சைக்கேளாத பெண்சாதி முகத்தில் நான் முழிக்கவே மாட்டேன்" என்று கூச்சலிடத் தொடங்கினார். முன்பு மூவர் கூச்சலாயிருந்தது; இப்பொழுது நால்வர்கூச்சலாச்சுது. இச்சமயம் அவ்வூர் சப் இன்ஸ்பெக்டரிட மிருந்து ஏதோ வேலையாய், ஹெட்கான்ஸ்டபில், தலையாரி வீட்டிற்கு வர, மேற்சொன்ன எல்லோரும் அவனிடம் தங்கள் தங்கள் கதையைச்சொல்லி முறையிட்டனர். அந்தசெவிட்டு ஹெட்கான்ஸ்டபில் இந்த நால்வரையும் இன்ஸ்பெக்டர் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனான். போகும்போது அவ்வூர் ஜனங்கள் இதேதோ வேடிக்கையென்று ஐந்தாறு பேர் கூடக் கும்பலாய்ச் சென்றனர். ஹெட்கான்ஸ்டபில், இன்ஸ்பெக்டரிடம் மேற்சொன்ன நால்வரும் ஒரு வீதியில் தூர் பாஷையாய்த் திட்டிக்கொண்டிருந்தனர் என்று பிராது கொடுத்தான்! அதன்பேரில் காது அடியுடன் கேளாத இன்ஸ்பெக்டர், வேடிக்கை பார்க்க வந்தவர்களையும் சேர்த்து பத்துப் பெயராகிறது; ஆகவே 10 பேர்களையும், கலகம் செய்து கொண்டிருந்தனர் என்று அவ்வூர் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தாவா செய்தார்!

அவ்வூர் மாஜிஸ்டிரேட் ஒரு சாயபு. அவர் கொஞ்சம் அபின் சாப்பிடுவது வழக்கம். ஆகவே, அன்றைத் தினம் மேற்படி கேசை விசாரித்து அடியிற் கண்டவாறு தீர்மானித்தார்.

"கேஸ் என்னமோ ருஜுவாகிவிட்டது. ஆகவே, முந்திய தினம் வாதி பக்கம் தீர்மானம் செய்தோம்; நேற்று பிரதிவாதி பக்கம் தீர்மானித்தோம்; இன்று சாட்சியின் பக்கம் தீர்மானம் செய்கிறோம்" என்று முடிவு கூறினார்!

# ஆஸ்பத்திரி விசாரணை

வட ஆற்காடு ஜில்லாவில் ஒரு ஆஸ்பத்திரி யிருந்தது. அந்த ஆஸ்பத்திரியின் முக்கிய வயித்திய உத்யோகஸ்தர் கொஞ்சம் சோம்பேறி. ஆஸ்பத்திரியை ஒழுங்காய் சுத்தமாய் வைத்துக்கொண்டிருப்பதில் அதிகமான காலத்தை செலவழிப்பதில்லை. ஆயினும் வருஷா வருஷம் சென்னையிலிருந்து பிரபல வயித்தியர் ஒருவர் மேற்பார்வை பார்க்கவரும்போது மாத்திரம் விழித்துக்கொண்டு எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக்கொள்வார். மேற் கண்டபடி மேற்பார்வை பார்க்கச் சென்னையிலிருந்து ஒரு வயித்திய உத்யோகஸ்தர் ஒரு முறை விஜயம் செய்தார். அவர் நாளைக்கு வரப்போகிறார் என்று தெரிந்தவுடன், இன்றைக்கே ஆஸ்பத்திரியை யெல்லாம் சுத்தி செய்து ஒழுங்காக வைத்து வைத்தார். மறுநாள் பதினொருமணிக்கு சென்னை வயித்தியர் வருமுன், ஒரு மணிக்கு முன்பாக தன் ஆஸ்பத்திரியில் எல்லாம் ஒழுங்காகவும் சுத்தமாகவும் இருக்கிறதா என்று மேற்பார்வை பார்த்துக்கொண்டு வந்தார். அச்சமயம் ஆஸ்பத்திரி நர்சுகள், வேலைக்காரர்கள், முதலியோரெல்லாம் சுத்தமான ஆடை உடுத்திக்கொண்டிருக்கிறார்களா என்று பரிசோதித்துப் பார்த்தபொழுது, கொஞ்சம் வயது சென்ற ஆஸ்பத்திரி மகம்மதிய கேட் ஜவான் மாத்திரம் மிகுந்த பழமையான மிகவும் அழுக்குப்படிந்த கருப்பு தலை குட்டை ஒன்றைக் கட்டிக் கொண்டிருப்பதைக்கண்டனர். உடனே கோபங்கொண்டவராய், அவனைக் கடிந்து "தக்ஷணம் அந்தபழய அழுக்கான தலைகுட்டையை எடுத்துவிட்டு வேறு தலைகுட்டைகட்டிக்கொண்டு வந்தாலாச்சு, இல்லாவிட்டால், உன்னை உடனே வேலையினின்றும் நீக்கிவிடுவேன்" என்று பயமுறுத்தினர். ஜவான் என்ன செய்வான் பாபம்! அத்தலை குட்டை அவனுக்குக் கலியாண காலத்தில் இருபத்தெட்டு வருஷங்களுக்கு முன் மாமியார் வீட்டார் கொடுத்தது. அது முதல் அதை விடாது சலவைக்கும் போடாமல் கட்டிக்கொண்டிருந்தான். அதில் எவ்வளவு துர்க்கந்தமும் அழுக்கும் இருந்ததென நான் சொல்ல வேண்டியதில்லை; இருந்த போதிலும் அந்த பழய தலைகுட்டையை

விட அவனுக்கு மனம் வரவில்லை. உடனே உள்ளே போய் தனக்கு பரிசயமான ஒருவரிடமிருந்த அங்கவஸ்திரத்தை வாங்கித் தலையில் சுற்றிக்கொண்டான். தன் பழய தலைகுட்டையை சாயங்காலம் வரையில் எங்கே வைத்திருப்பது என்பது அவனுக்குக் கவலை தந்தது. வெளியில் எங்கேயாவது மாட்டி வைத்தால் யாராவது களவு செய்துகொண்டு போய் விட்டால் என்ன செய்வது என்பது பெரிய கவலை; அதன் பேரில் ஆஸ்பத்திரி முழுவதும் சுற்றிப்பார்த்து, ஓரிடத்தில் அதை பத்திரமாய் ஒருவருமறியாதபடி மறைத்து வைத்தான். அது எந்த விடமென்று இதை வாசிக்கும் எனது நண்பர்களுக்குப் பிறகு தெரியவரும்.

பிறகு கொஞ்ச நாழிகைக்கெல்லாம் சென்னையிலிருந்து வந்த பிரபல ஆங்கில வைத்தியர் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தார். அவர் 'முக்கியமாக நாம் குடிக்கும் தண்ணீரிலும், உட்கொள்ளும் ஆகாரத்திலும் சுத்தமாயிருக்கவேண்டும், அப்படியிருந்தால் நம்மைப் பீடிக்கும் வியாதிகளில் நூற்றுக்கு எண்பது பங்கு நம் அருகில் வரமாட்டா' என்னும் கோட்பாடுடையவர். இதைப்பற்றி அநேகப் பிரசங்கங்களும் செய்தவர், புஸ்தகங்களையும் எழுதியவர். அப்படிப்பட்டவர் ஆஸ்பத்திரியில் எல்லாம் சுத்தமாயிருக்கிறதா என்று மேல்பார்வை பார்த்துக்கொண்டு வரும்போது, மற்றெல்லாம் மிகவும் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கிறது என்று நமது ஜில்லா வயித்தியரைப் புகழ்ந்துவிட்டு, ஆஸ்பத்திரி வாசிகள் குடிப்பதற்காக வைக்கப்பட்டிருக்கும் தீர்த்தத்தைப் பரிசுத்தம் செய்யும் பில்டர்களை (Filters)ப் பரிசோதித்துக் கொண்டு வந்தார். அதில் ஒன்றின் குழாயைத் திருப்பிய பொழுது தண்ணீர் வேகமாக வரவில்லை. என்னகாரணம் என்று கண்டறிய வேண்டி அதன் மேல் மூடியைத் திறக்க, கருப்பாக ஒரு வஸ்து காணப்பட்டது. கொஞ்சம் சாலேஸ்வரமுடைய அவர், விரலினால் அது இன்னதென்றறிய வேண்டி இழுக்க கருப்புத் துணியின் முனை ஒன்று அவர் கையிலகப்பட்டது. அதனை மெல்லப் பிடித்து இழுக்க, ஒரு பெரிய தலை குட்டை ஒரு நாகத்தின் வால்போல் அதனின்றும் வெளி வந்தது! பக்கத்திலிருந்தவர்களெல்லாம் அப்படியே பிரமித்துப்

போயினர். அப்படி வெளிவந்த வஸ்து நமது ஜவானுடைய பழைய அழுக்குத் தலைகுட்டை யென்று இதை வாசிக்கும் எனது நண்பர்களுக்கு நான் சொல்லவேண்டியதில்லை. வேறே எங்கேயாவது வைத்தால் அதை யாராவது திருடிக்கொண்டு போய் விடுவார்களென்று நமது ஜவான், பத்திரமாயிருக்கவேண்டி அதை அந்தக் குடிக்கும் தண்ணீர் பில்டரில், ஒளித்துவைத்தான்!

அந்த அழுக்குத் தலை குட்டையைத் தீண்டிய அசுத்தம் போக அந்த வயித்தியர் ஐந்து நிமிஷம் சோப் போட்டு கை கழுவினதாகச் சொல்லுகிறார்கள்.

அந்த வருஷம் நமது இந்தியன் வயித்தியருக்கு புரொமோஷன் (promotion) கிடைக்கவில்லை. நமது ஜவானுக்கு மாத்திரம் கிடைத்தது—டிஸ்மிசல்!

# அசந்தர்ப்பங்கள்

அடியிற்கண்ட அசந்தர்ப்பமான சந்தர்ப்பங்கள் என் மனோ சஞ்சாரத்தினால் நிர்மாணிக்கப்பட்டவைகளல்ல — வாஸ்தவத்தில் என் கண்ணாரக் கண்டதும் காதாரக் கேட்டவைகளுமே.

(1) மொஹரம் பண்டிகை யென்பது மஹம்மதியர்களைச் சார்ந்தது; அதிலும் ஷியா (Shiah) வகுப்பினரைச் சேர்ந்தது. இது அவர்களால் மிகவும் துக்ககரமாகக் கொண்டாடப் படுவது. இதில் ஹிந்துக்கள் சேர்வதே ஒரு அசந்தர்ப்பம்; அந்த ஹிந்துக்கள், பஞ்சாக்களை எடுத்துக்கொண்டு போகும்போது நாகசரம் வாசிப்பது, இன்னும் அதிக விசேஷமானதாம். சில வருடங்களுக்கு முன் சில ஹிந்துக்கள் இவ்வாறு மொஹரத்தின் எட்டாம் நாளாகிய "நவாப்பீலி" யன்று, இவ்வாறு பஞ்சாக்களை எடுத்துக்கொண்டு நாகசர வாத்தியத்துடன் ஊர்வலம் வரும் பொழுது, அந்த நாகசரக்காரன் "ராம! நீ சமானமெவ்வறு?" என்னும் தியாகையர்

கிருதியை வாசித்துக்கொண்டு போனான்! இந்த அசந்தர்ப்பத்தை என்னென்று சொல்வது?

(2) சிலநாட்களுக்கு முன்பாக எனக்கு ஒரு நாடக விளம்பரம் கிடைத்தது. அதில் அல்லி அர்ஜுனா நாடகத்தை நடத்தப் போகிற விஷயம் கண்டிருந்தது. அதில் அப்துல் காதர் சாயபு அர்ஜுனனாக நடிப்பார் என்று பிரசுரித்திருந்தது. நாடகம் மதசம்பந்தமான நாடகம், நாடகபாத்திரம் பரம சிவபக்தனான அர்ஜுனன், அதை நடிப்பவனோ ஒரு மகம்மதியன்! அந்த ஆக்டர் நன்றாய் நடித்திருக்கலாம், அதைப்பற்றி நான் கூற வரவில்லை. இந்த அசந்தர்ப்பத்தைப்பற்றியே கூறவந்தேன். ஒரு கிருஸ்து மத சம்பந்தமான ஒரு நாடகத்தில் வைஷ்ணவ பாகவதர் நடிப்பது எவ்வளவு பொருத்த மின்மையாகும்!

(3) மேற்கண்ட அசந்தர்ப்பத்திற்கு சமானமாக வேறொன்றைத்தான் கூறக்கூடும். அது என்னவென்றால்-நந்தனார் நாடகத்தில், கறுத்த மேனியையும் செம்பட்டை மயிரையும், முகத்தில் தாடியையும், மீசையையும்,அரையில் ஒரு கிழிந்த துண்டையும் உடையவனாயிருக்கவேண்டிய ஒரு நாடகபாத்திரத்தில், ஒரு சிறுபெண், தலையில் நடுவில் வகடு எடுத்து, மயிரை காதுக்குக்கீழாக கிராப் (crop) செய்து கொண்டது போல் அணிந்து, உடம்பை கணுக் கால்வரையில் வஸ்திரங்களால் மூடி, நடித்ததேயாம்.

(4) "பெயர் கங்காபவானி குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை" என்று ஒரு பழமொழி யுண்டு. சில வருடங்களுக்கு முன் ஒரு பிச்சைக்காரக் கிழவி, பிச்சைக்கு அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வருவாள், அவள் "தாயில்லாத கிழவியம்மா! ஒரு பிச்சை போடம்மா!" என்று கூவிக்கொண்டே வருவாள். தாயில்லாத கிழவி என்பதே ஒரு விசேஷம்! குழந்தைகளெல்லாம் "தாயில்லாக் கிழவி வந்திருக்கிறாள், பிச்சை போட வேண்டும்" என்று அவளுக்கு முக்கியமாகப் பிச்சை போடுவார்கள்! ஒருநாள் அவளுடைய பெயர் என்னவென்று நான் வினவ, "தர்மாம்பாள்" என்று பதில் உரைத்தாள். தர்மாம்பாள் என்பது தர்மசமவர்த்தினி என்னும் அம்மனுடைய

பெயராம். தர்ம தேவதையே பிச்சையெடுக்க நேரிட்டது கலிகாலக் கொடுமையால்! பெயரிலாவது கொஞ்சம் பொறுத்த மிருக்கலாகாதா? என்னுடைய நண்பர் ஒருவர் இருந்தார்; அவர் கிறிஸ்தவர், பெயர்மாத்திரம் "சிவ சுப்பிரம்மண்யம்!" அந்தப்படி, பிச்சையெடுக்கும் இக்கிழவியின் பெயர் தர்மாம்பாள்!

(5) சென்ற வருடம் "வள்ளிமணம்" என்னும் பேசும் படக்காட்சி ஒரு இடத்தில் காட்டப்பட்டது. வள்ளிமணம் என்பது ஒரு சுபமான விஷயத்தைப்பற்றிய கதை யென்பதைப்பற்றி இங்கு எழுதவேண்டியதில்லை. அதில் ஆரம்பக்காட்சியில் வள்ளி வேடம் பூண்ட ஸ்திரீ தலைமயிரை விரித்துப் போட்டுக்கொண்டு பிரலாபிக்கிறாள்! நமது நாட்டில் ஸ்திரீகள் தலைமயிரை விரித்துப் போட்டுக்கொண்டு அழுவது, தங்கள் கணவன் இறந்த சமயத்தில் தான் என்பதை நான் தெரிவிக்கவேண்டியதில்லை. ஷேக்ஸ்பியர் மஹாகவியின் நாடகங்களின் முதல் காட்சியில் பின் வரும் முக்கிய விசேஷத்தை முன்னதாகவே குறிக்கிறார் என்பது அவரது நாடகங்களை தற்சமயம் நடிக்கிறவர்களுக்கு நன்றாய்த் தெரியும். இந்த டாக்கியை அமைத்தவர்களுடைய கொள்கை, வள்ளி தேவிக்கு கடைசியில் கலியாணமாகப்போகிறதென்பதை முதல் காட்சியில் அவள் தலைவிரி கோலமாய் அழுவதினால் காட்டவேண்டுமென்பது போலும்!

(6) சில வருடங்களுக்கு முன்பு ஒரு சமயம் இங்கிலாந்திலிருந்து வந்த ஒரு சீமானுக்கு நல்வரவாக ஒரு கொண்டாட்டம் நடந்தது. அச்சமயம் அச்சீமானை நடுவில் நிறுத்தி, ஊர்கோலமாக, பார்க்கைச் சுற்றிவர ஆரம்பித்தபொழுது, முதலில் பாண்டு வாத்தியக்காரர்கள் வாசித்துக்கொண்டு போக ஏற்பாடு செய்தனர். ஊர்கோலம் ஆரம்பித்தபொழுது, அதைஏற்பாடு செய்தவர்கள், ஊர் கோலம் போகும்பொழுது ஏதாவது சவுக்கமாக மார்ச் (March) வாசிக்கவேண்டுமென்று பாண்டு தலைவனுக்குச் சொல்ல, அவன் அப்படியே ஆகட்டுமென்று தலையசைத்துவிட்டு, கிறிஸ்தவர்கள் இறந்த பிணத்தை எடுத்துக்கொண்டு போகும் பொழுது மெல்ல வாசிக்கும் டெட் மார்ச் (Dead march) என்னும் பாட்டை

வாசிக்க ஆரம்பித்தான்! அங்கிருந்த அநேகம் இந்துக்களுக்கு இந்த மர்மம் தெரியாது. சில வெள்ளைக்காரர்கள் இதென்ன கோரம் என்று அதன் விவரத்தைக் கூறியபின்தான் அங்கிருந்தவர்கள் பாண்டுகாரனுக்கு புத்தி சொல்லி அதைத் தடுத்தனர். அந்த பாண்டுகாரனுக்கு அந்தப் பாட்டு தெரியுமே யொழிய எந்த சந்தர்ப்பத்தில் அதை வாசிப்பது, என்று தெரியாது; என்ன செய்வான் பாபம்!

(7) ஒரு சமயம் ஒரு நாடக சபையில் சீதாகல்யாணம் எனும் நாடகமானது வெகு விமரிசையாக நடத்தப்பட்டது. அந் நாடகத்தில் ஸ்ரீராமராக வேடம் பூண்ட இளைஞன் நல்ல சாரீர சம்பத்துடையவன், அன்றியும் அவன் ஸ்வராஜ்ய கட்சியைச் சார்ந்தவன், அநேகம் ஸ்வராஜ்ய பாட்டுகளை நன்றாய்ப் பாடும் திறமையுடையவன். சீதாகலியாண நாடகத்தில் ஸ்ரீராமர், வில்லை ஒடித்த காட்சி ஆடியபொழுது, வில் முறிந்தவுடன் சீதை ராமருக்கு மணமாலை சூட்டிய உடன், ஏதோ மங்களகரமான ஓர் பாட்டை மேற்கண்ட ஆக்டர் பாடினான். அது முடிந்தவுடன், கரகோஷம் செய்த ஜெனங்கள், அவனை "பண்டிட் மோதிலால்" பாட்டைப் பாடும்படி ஒரே கோஷ்டமாய்க் கூச்சலிட்டார்கள்! அதற்கிசைந்து ஸ்ரீராமர் சீதையிட்ட மணமாலையுடன் பண்டிதமோதிலாலைப் பறிகொடுத்தோமே, என்று அழுதுகொண்டே பாடினான்! எனக்கு வேறொன்றுமில்லை, சந்தர்ப்பத்திற்கேற்றபடி வேறு எப்பாட்டையாவது பாடச் சொல்லாது, மணமகனை மடிந்தவர்க்காக அழச்சொல்லத்தானு கேட்கவேண்டுமென்பது தான்!

(8) தென் இந்தியாவில் "ஜெய்" கோஷம் போடும் வழக்கம் சில வருஷங்களுக்கு முன்பு கிடையவே கிடையாது. மஹாத்மா காந்தியவர்களின் பெயர் இங்கு பிரபலமான பிறகு தான் "மஹாத்மா காந்திக்கு ஜெய்!" என்கிற சப்தம் பரவி, இங்கு ஜெய கோஷமும் பரவியது. இக்கோஷம் மன்னர்களுக்கோ அல்லது பெரியார்க்கோ ஜெயமுண்டாகுக! என்கிற சந்தர்ப்பத்தில் சாதாரணமாய் வட நாட்டில் வழங்குவதாம். இதை அறிந்தோ அறியாமலோ, "கிளாவர் பீடிகி ஜெய்! "இஸ்பெட் பீடிகி ஜெய்!

"அரிச்சந்திரா மயான காண்டத்துக்கு ஜெய்!" என்று சென்னையில் பல வீதிகளில் தினம் ஜனங்கள் கோஷ்டம் போடுகிறார்கள். இவைகளை யெல்லாம் பலரறியப் பிரசுரம் செய்யவேண்டுமென்றால் வேறு வகையில்லாமலா போயிற்று?

(9) ஒரு முறை சென்னையில் ஒரு விநாயகர் கோயிலில் கும்பாபிஷேகமோ அல்லது ஏதோ ஒரு முக்கியமான உற்சவம் நடந்தது. அன்று உற்சவதினம் சாயங்காலம் அக்கோயில் தர்மகர்த்தர்கள் அக்கோயிலின் மண்டபத்தில் ஒரு பாகவதரைக் கொண்டு ஒரு கதை ஏற்படுத்தினார்கள். கதை "ராமதாஸ்" சரித்திரம்! எனக்கு சைவ வைஷ்ணவத்துவேஷம் என்பது கொஞ்சமேனும் இல்லை என்பதை எனது நண்பர்கள் அனைவரும் அறிவார்கள். ஆயினும் இங்கு நான் எடுத்துக் கூறவந்ததென்னவென்றால், விநாயகர் கோயிலில் பகவத்கதை வைத்துக்கொள்ளும் பொழுது சைவபரமாக ஏதாவது கதை வைத்துக்கொள்ளக் கூடாதா? ராமதாஸ் கதையாகிய வைஷ்ணவ சம்பந்தமான கதையைத் தான் பொறுக்கி எடுக்கவேண்டுமா? என்பதுதான். சமயோசிதமாக இந்த சந்தர்ப்பங்களிலெல்லாம் தக்கபடி ஏற்பாடு செய்யவேண்டுமென்பதுதான் என் அபிப்பிராயம். இதற்காக நான் நேரிற்கண்ட நாடக சம்பந்தமான ஒரு அசந்தர்ப்பத்தைக் கூறி இவ்வியாசத்தை முடிக்கிறேன்.

(10) ஒரு முறை விக்டோரியா பப்ளிக் ஹாலில் ஒரு சபையார் வள்ளிமணம் என்னும் நாடகத்தை நடத்தினார்கள். அதில் சுப்பிரமணியர் வயோதிகனாக வேடம் பூண்டு வள்ளியின் மனதைப் பரிசோதிக்கிற காட்சி ஒன்றுண்டு என்பதை இதை வாசிக்கும் எனது நண்பர்கள் அறிவார்கள். அக்காட்சியில் வயோதிகர் புசிப்பதற்காக வள்ளி தேனும் தினைமாவும் கொண்டு வருகிறாள். காட்சி நடக்கும் இடமோ காடு, வள்ளியோ வேடுவஜாதியில் வளர்ந்துவந்த பெண்; கதை நிகழ்காலமோ கிருத யுகம்! அச்சமயத்தில் வள்ளி தேனும் தினைமாவும் கொண்டுவந்த பாத்திரம், 1933 ஆம் வருஷம் சைனாதேசத்தில் செய்யப்பட்ட பீங்கான் கோப்பை! இந்த சந்தர்ப்

பத்தில் வேறு தக்கபாத்திரம் கிடைக்காவிட்டால், ஒரு இலேபிலா வது அதைக் கொண்டு வந்திருக்கலாகாதா என்று யோசித்தேன்!

## அம்கு மாலும்நை சாயபு கதை

நமது சபாபதி முதலியார் ஒரு முறை நிஜாம் ராஜ்யத்தின் பிர தான பட்டணமாகிய ஐதராபாத்துக்குப் போயிருந்தார், தன் வேலையாள் சபாபதியுடன், என்று நான் கூற வேண்டியதில்லை. போன மறுதினம் பட்டணத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்று விரும்பி, சபாபதியுடன் அப் பட்டணத்திலுள்ள வேடிக்கை விநோ தங்களையெல்லாம் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தார். அப்படி வரும்பொழுது தங்கள் எதிரில் ஒரு வீதியில் பெரிய மாளிகை யொன்று புலப்பட்டது. உடனே இவ்வழகிய மாளிகை யாருடைய தென்று அறிந்துவரும் பொருட்டு சபாபதியை அதனருகில் அனுப் பினார். அவன் அதற்குள் உக்கா பிடித்துக்கொண்டிருந்த சாயபு ஒருவரைப் பார்த்து, தமிழில், இது யாருடையது என்று கேட்க, அப்பாஷை யறியாத அந்த சாயபு சும்மா இருந்தான். பிறகு தன் பாஷை அவனுக்குத் தெரியாதென்று அறிந்தவனாய் சபாபதி சைகையால் கட்டிடத்தைக் காட்டி யாருடையதென்று கேட்டுப் பார்த்தான். அதற்கு அந்த உக்கா சாயபு "அம்கு மாலும்நை சாயபு" என்று பதில் உரைத்தார். உடனே சபாபதி அப்பதிலைக் கேட் டுப் பாடம் செய்துகொண்டுவந்து, சபாபதி முதலியாரிடம் "இந்த மாளிகை அம்கு மாலும்நை சாயபுடையதாம்" என்று தெரிவித் தான். இந்துஸ்தானியில் ஒரு பதமும் அறியாத நமது முதலியார் சரிதான் என்று ஒப்புக்கொண்டு கொஞ்சதூரம் போனார். அங்கு முன்பு பார்த்ததைவிட இன்னும் அழகிய மாளிகை ஒன்று தென் பட, அது யாருடையது என்று விசாரித்துவர, சபாபதியை அனுப்பினார்; முன்புபோல் சபாபதி அங்கு போய்க்கொண்டிருந்த

ஒரு பட்டிக்காட்டானைக் கேட்க, அவனும் "அம்கு மானும்நை சாயபு" என்று தெரிவிக்க, இந்த மாளிகையும் "அம்கு மானும்நை சாயபுடையதுதான்" என்று சபாபதி தன் எஜமானனிடம் தெரிவித்தான். அதன்பேரில் சபாபதி முதலியார், அம்கு மானும் நை சாயபு என்பவர், இவ்வூரில் பெரிய பணக்காரராயிருக்க வேண்டுமென்று நினைத்துக்கொண்டு போனார். இப்படியே ஒரு பெரிய ஆஸ்பத்திரியும் பள்ளிக்கூடமும் "அம்குமானும்நை" சாயபுடையது என்று அறிந்துகொண்டு போனார். கொஞ்சதூரம் சென்றபிறகு ஒரு மகம்மதிய சவத்தை, கபரஸ்தானுக்கு (புதைக்கும் இடத்திற்கு) பெருந்திரளான ஜனங்கள் எடுத்துக்கொண்டு போவதைக்கண்டனர். அதன்பேரில் யாருடைய சவம் அது என்று சபாபதியை அனுப்பி விசாரிக்க, அதற்கும் சபாபதி முன்போல் 'அம்குமானும் நை சாயபுடையது' என்று பதில்கொண்டுவந்தான். அதன் மீது சபாபதி முதலியார், பெரியகோடீஸ்வரன், மிகுந்த தர்மசீலன், பரலோகம் செல்ல வேண்டி வந்தது." என்று கொஞ்சம் துக்கப்பட்டார். பிறகு ஊரையெல்லாம் சுற்றிக்கொண்டு தான் இறங்கியிருந்த வீட்டிற்கருகாமையில் வரும்பொழுது, ஒரு மணமகன் மணக்கோலத்துடன் தன்மாமியார் இல்லம்செல்ல ஊர்வலம் வந்துகொண்டிருந்தான். இந்த மணப்பிள்ளை யார் என்று விசாரித்து வரும்படி சபாபதியை யனுப்பிவிட்டு, தான் இறங்கியிருந்த வீடுபோய்ச் சேர்ந்தார். உடனே சபாபதி முன்போல விசாரித்து திரும்பி வந்து, கலியாணமாப்பிள்ளையின் பெயர் "அம்குமானும் நை சாயபு" என்று தெரிவிக்க, சபாபதி முதலியாருக்கு பெருங்கோபம் வந்தது. "கொஞ்ச நேரத்திற்கு முன்பு அந்த "அம்கு மானும் நை சாயபு" இறந்து போனார், புதைக்கத் தூக்கிக்கொண்டு போனார்கள், என்று தெரிவித்தாய், இப்பொழுது அவர் கலியாண மாப்பிள்ளையாக ஊர்கோலம் வருகிறார்" என்று பொய் சொல்கிறாயா?" என்று அவன் முதுகில் இரண்டறை கொடுக்க, சபாபதி "நான் என்னப்பா செய்யரது? எனக்கு சொன்ன பெயரை நான் உனக்கு சொன்னேன்!" என்று அழுதுகொண்டே சொன்னான். இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அந்த வீட்டு எஜமான், சபாபதி முதலியாரை இவன் என்ன தப்பிதம் செய்தான் என்று வினவ, சபாபதி முதலியார் மேல் நடந்த விர்த்தாந்தத்தை

அறிவித்தார். அதன் பேரில் இந்துஸ்தானி பாஷை தெரிந்த அவர் "அம்கு மாலூம் நை சாயபு" என்று ஒருவருக்கும் பெயரில்லை; அதற்குப் பொருள் என்னவென்றால் "எனக்குத் தெரியாது ஐயா" என்பதாம் என்று அறிவித்தார். அவர் பிறகு வீட்டின் இரண்டாங் கட்டிற்குப் போனவுடன் சபாபதி, முதலியாரைப் பார்த்து "என்னப்பா அது! நீயும் கொஞ்சம் இந்துஸ்தானி பாஷை தெரிந்திருந்தால், எனக்கு பூசை விழுந்திருக்காதே; இண்ணைக்கி!" என்றான்.

## தீண்டாமை

தீண்டாமையைப்பற்றி மிகவும் கடுமையான விரதம் பூண்ட சுந்தர ஐயர் எனும் ஒரு பிராம்மணர் சிந்தாதிரிப்பேட்டையில் வசித்து வந்தார். அவர் ஒரு புத்தக வியாபாரி; யாராவது சூத்திரர்கள் தன்னிடம் புத்தகங்கள் வாங்கவேண்டி வந்தால், அவர்கள் வேண்டிய புத்தகங்களை அவர்களிடம் கொடுத்து, அவர்கள் அவற்றின் பொருட்டு பணம் கொடுத்தால், அப்பணத்தை கையில் வாங்காமல், தன் எதிரில் வைக்கச் சொல்லி, இதற்கென்று தன் பக்கத்தில் எப்பொழுதும் சித்தமாய் வைத்திருந்த பஞ்ச பாத்திரத்தினின்றும் உத்தரிணியில் ஜலத்தை யெடுத்து அப்பணத்தின் மீது புரோட்சணம் செய்து விட்டு, பிறகுதான் அப்பணத்தைத் தீண்டி எடுத்து தன் பைக்குள் சேர்த்துக்கொள்வார். இவ்வழக்கம் நெடுநாளாக நடந்து வந்தது. இதை யறிந்த நமது சபாபதி முதலியார், தான் அவரிட மிருந்து ஏதோ ஒரு புஸ்தகம் விலைக்கு வாங்க சமயம் நேரிட்டபொழுது, தன் கையில் பணத்துடன் ஒரு வெள்ளிபாத்திரத்தில் குழாய் ஜலம் பிடித்துக்கொண்டு சென்றார்! சுந்தர ஐயர் வீடுசென்றதும், அவரைக்கண்டு தான் வேண்டிய புஸ்தகத்தின் பெயரைச் சொல்லி அதற்குரிய விலையை அவர்

எதிரில் வைக்க, சுந்தர ஐயர், தன் வழக்கப்படி, பஞ்சபாத்திரத்தினின்றும் உத்தரணியால் ஜலத்தை யெடுத்து பணத்தின் மீது புரோட்சித்து, பிறகு அதைக் தட்டிப்பார்த்து எடுத்துக்கொண்டு, தன் பையில் சேர்த்துக்கொண்டு, சபாபதி முதலியார் வேண்டிய புஸ்தகத்தை அவர்கையில் கொடுக்க முயல, சபாபதி முதலியார் சுந்தர ஐயரை அப்புஸ்தகத்தை தரைமீது வைக்கும்படி சொன்னார். சுந்தர ஐயரும் அப்படியே புஸ்தகத்தைத் தரைமீது வைக்க, சபாபதி முதலியார், தன் பின்புறமாக ஒளித்துவைத்திருந்த வெள்ளிப்பாத்திரத்தை எடுத்து, அதிலிருந்த குழாய் ஜலத்தை அப்புத்தகத்தின் மீது கொட்டி சுத்தம் செய்ய ஆரம்பித்தார்! அதன்மீது சுந்தர ஐயர், "ஏன் இப்படிப் புஸ்தகத்தின் மீது ஜலம் கொட்டிக் கெடுக்கிறீர்?" என்று கேட்க, சபாபதி முதலியார் "வேறொன்றுமில்லை, நான் தொட்ட பணத்தை நீங்கள் ஜலத்தினால் சுத்தம் செய்து தீண்டிய பிரகாரம், நீங்கள் தொட்ட புஸ்தகத்தை நான் ஜலத்தினால் சுத்தி செய்து எடுத்துக்கொள்ளுகிறேன்!" என்று பதில் உரைத்தார்.

அது முதல் சுந்தர ஐயர் மேற்சொன்ன தீண்டா விரதத்தை விட்டொழித்தனர் என்று கேள்வி.

# சகுனம் பார்த்த கதை

சென்னையில் கதிர்வேலு முதலியார் என்று ஒரு முதலியார் இருந்தார். அவர் சகுனங்களை யெல்லாம் கவனிப்பதில் மிகவும் ஈடுபட்டவர்; வீட்டைவிட்டு புறப்படும்பொழுது யாராவது தும்பினாலும் சரி, இரும்பினாலும்சரி, மழை தூறினாலும் சரி, பூனை குறுக்கே வந்தாலும் சரி, அன்று புறப்படவே மாட்டார். அப்படிப் பட்டவர் இருந்த வீட்டில் தெய்வ கதியால் தனிஷ்டா பஞ்சமியன்று ஒரு சாவு நேர்ந்தது. அதன்பேரில் புரோகிதர்கள் கூறிய

படி, தன் வீடு முழுதும் சாற்றிவிட்டு வேறுவீட்டில் குடியிருந்து வந்தார். மூன்று மாதங்கள் கழிந்தவுடன், ஜோஸ்யர்களைக் கேட்டு ஒரு நல்ல நாளாக நியமித்துக்கொண்டு அன்றைத் தினம் தன் சம்சாரத்துடன் தன் பழய வீட்டிற்கு மறுபடியும் குடி புக வேண்டுமென்று தீர்மானித்தார். சகுனங்களெல்லாம் நன்றாய் இருக்க வேண்டுமென்று ஏற்பாடுசெய்து, தன் வேலைக்காரியாகிய லட்சுமி என்பவளை அழைத்து "எங்கள் பழய வீட்டு சாவியை உன்னிடம் கொடுக்கிறேன்; நாங்கள் காலை 9-மணிக்கு அங்கு வருவோம், அதற்கு முன்பாக நீ போய் அதைத் திறந்து, உள்ளே உட்கார்ந்து கொண்டிரு; நாங்கள் 9-மணிக்கு வந்து வெளியில் கதவைத் தட்டுகிறோம், அப்பொழுது உள்ளிருந்து உன் குரலைக்கொடு; அப்பொழுது நீ யார் என்று நான் கேட்கிறேன்; நான்தான் 'லட்சுமி' என்று நீ பதில் சொல்லிக், கதவை திறந்து எங்களை வரவழை" என்று சொல்லிக்கொடுத்தார்.

லட்சுமியும் அவர் சொன்னபடியே ஒரு மணிக்கு முன்பாக அப் பழய வீட்டிற்குப் போய் கதவைத் திறந்து வீட்டை யெல்லாம் பெருக்கி சுத்தம் செய்துவிட்டு, தெருக் கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே உட்கார்ந்திருந்தாள். அச்சமயம் அவள் இங்கிருப்பதை யறிந்து அவளது தமக்கை (தன் புருஷனை சிறு வயதிலேயே யிழந்த அமங்கிலி) அந்த வீட்டிற்குப் போய்க் கதவைத் தட்ட, லட்சுமி தன் தமக்கையின் குரலைக்கேட்டு, கதவைத் திறந்துகொண்டுவந்து என்ன விசேடம் என்று வினவ, "உன் பெண் குழந்தைக்கு தேள் கொட்டிவிட்டது, அம்மா, அம்மா, வென்று துடித்து அழுகிறாள். உனக்கு தேள்கடிக்கு ஏதோ மந்திரம் தெரியுமாமே, உடனே போய் குழந்தையை கவனி" என்றாள். அதன்பேரில் லட்சுமி, தான் போய் சீக்கிரம் திரும்பி வந்துவிடலாமென்று எண்ணினவளாய், "நான் போய் பார்த்துவிட்டு வருகிறேன், அதுவரையில் நீ இந்த வீட்டிற்குள் கதவைச் சாத்திக்கொண்டு இரு," என்று சொல்லிவிட்டு, தன் தமக்கையை அங்கிருக்கச் செய்து தான் வேகமாகத் தேள் கொட்டின தன் சிறு குழந்தையைக் கவனிக்கப் போனாள். அவள் வீடு கொஞ்சம் தூரம்; அவள் போய் குழந்தையை மந்திரித்துவிட்டு சமாதானம் செய்துவிட்டுத் திரும்புமுன், நமது கதிர்

வேலு முதலியார் தன் சம்சாரத்துடன் இவ்வீட்டிற்கு லக்னமெல்லாம் பார்த்துக் கொண்டு வந்து சேர்ந்தார். வந்தவுடன் தான் முன்பு ஏற்பாடு செய்தபடி, கதவைத் தட்ட, முதலில் உள்ளிருந்து பதில் ஒன்றும் வரவில்லை, பிறகு பலமாய்த் தட்ட, உள்ளிருந்தவள் யார் அது? என்று ஒரு குரல் வந்தது. இதேது புதிய குரலாய் இருக்கிறதென சந்தேகித்தவராய், கதிர்வேலு முதலியார் உள்ளே இருக்கிறது யாரம்மா? என்று கேட்டார். கொஞ்ச நேரம் பதில் வரவில்லை. அதன்பேரில் உரத்த சப்தமாய் "யார் அது? லட்சுமியா?" என்று கேட்க, உள்ளிருந்து "அல்ல" என்று பதில் வந்தது, அதன்பேரில் கொஞ்சம் கோபம் கொண்டவராய் "பிறகு யார் அது உள்ளே யிருப்பது." என்று கேட்க, உள்ளிருந்தவள், "லட்சுமியின் அக்காள்!" என்று உரக்க பதில் உரைத்தாள். லட்சுமி தேவியாகிய ஸ்ரீதேவியின் அக்காள் யாரென்று நான் இதை வாசிக்கும் நண்பர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டியதில்லை. பிறகு கதிர்வேலு முதலியார் தன் கோபத்தையும் துக்கத்தையும் அடக்கிக்கொண்டு, கதவைத் திறக்கச் சொல்லி உள்ளே நுழைந்து, யார் இந்த புது பெண்பிள்ளை யென்று கவனிக்கும்பொழுது, அமங்கிலி எதிர்பட்டாள்! அதுமுதல் "இனிமேல் சகுனம் பார்ப்பதில்லை" யென்று கதிர்வேலு முதலியார் தீர்மானித்ததாகக் கேள்விப்பட்டேன்.

## "வயது"

எனது இளைய நண்பர்கள் வயதைப் பற்றி என்ன வேடிக்கையாய் எழுதக்கூடும் என்று எண்ணலாம், அப்படி எண்ணுபவர்களெல்லாம் இந்த சிறு வியாசத்தை முழுவதும் படித்துவிட்டு, பிறகு தீர்மானிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

ஒரு மனிதன் தன் சொந்த விஷயங்களைப்பற்றி உறுதியாய் எதையும் கூறலாம்—ஆனால் வயதைப்பற்றி மாத்திரம் ஊர்ஜிதமாய்க் கூறமுடியாது. ஏன்? தான் பிறந்த விஷயத்தைப்பற்றி தனக்குச் சொந்த ஞாபகம் சிறிதும் கிடையாதல்லவா? இன்ன வருஷம் இன்னமாசம் இன்ன தேதியில் நீ பிறந்தாய் என்று மற்றவர்கள் சொல்லக் கேட்டதுதானே! மற்றவர்கள் சொல்லக் கேட்டதைச் சொன்னால் நியாய சபையில் சாட்சியமாகக் கூட ஒப்புக்கொள்ளப்படாது. இதுகாரணம்பற்றிதான் நூற்றில் தொண்ணூற்றொன்பது பெயர்கள் தங்கள் வயதைப்பற்றி உண்மையை உரைப்பதில்லை போலும்! உங்களுடைய அத்யந்த நண்பர்களையெல்லாம் அவர்கள் வயதென்னவென்று கேட்டுப்பாருங்கள்; பாதி பெயர் அதற்கு பதிலே உரைக்கமாட்டார்கள்; மற்ற பாதிப்பெயர் — மிகவும் வற்புறுத்தினால்—உண்மையை உரைத்திடாது—குறைத்தே சொல்வார்கள்.

இவ்வாறு நம்முடைய வயதைக் குறைத்துச் சொல்லும் வழக்கம் நமது தொட்டிலிலிருந்தே நமது உடலில் ஊறி வருகிறது. கைக்குழந்தைகளை ரெயில் மார்க்கமாய் எடுத்து செல்வதென்றால் அவர்களுக்கு மூன்று வயது முடியும் வரையில் டிக்கட்டுகள் வாங்கவேண்டியதில்லை. இக்காரணத்தினால் நமது தேசத்து கைக்குழந்தைகள் மூன்று வயது வந்தவுடன் இரண்டொரு வருடங்கள் வளராமலே யிருக்கின்றன சுமார் ஐந்து வயது வரையில்! அவர்களை ரெயிலில் கொண்டு போகும்போதெல்லாம் இரண்டரை வயதுதான்! உங்களுக்கு இதைப்பற்றி ஏதாவது சந்தேக மிருந்தால் ரெயில்வே டிக்கட் பரீட்சகர்களைக் கேட்டுப்பாருங்கள். இந்த வழக்கம் நம்முடைய தேசத்தில் தான் என்று நாம் வெட்கப்பட வேண்டாம்; எல்லாத் தேசங்களிலும் இந்த வழக்கம் மிகவும் சாதாரணம்.

பிறகு சாதாரணமாக நம்மவர்கள் நமது குழந்தைகளை பள்ளிக்கூடத்திற்கு ஐந்து வயதில் அனுப்புவது வழக்கம். பள்ளிக்கூடங்களில் சேர்க்கும் பொழுதே அவர்கள் தந்தைமார்கள்—முக்கியமாக அவர்கள் கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தர்களாக இருந்தால்—ஒருவருஷம் ஒன்றரை வருஷம் குறைத்தே எழுதிவைப்பார்கள்;

ஏனென்றால் அதன் பலன் அவர்களுக்குத்தான் முக்கியமாகத் தெரியும். ஐம்பத்தைந்து வயது உண்மையில் பூர்த்தியானவுடன், துரைத்தனத்தாரால் பென்ஷன் வாங்கிக்கொள்ளும்படி கட்டாயப் படுத்தாதபடி இன்னும் இரண்டொரு வருஷம் உத்தியோகத்திலிருக்கலாமல்லவா ?

பிள்ளையாண்டானுக்கு பன்னிரண்டாவது வயதாகும்போது இன்னொரு கஷ்டம். ரெயில் பிரயாணம் செய்யும் பொழுதும், நாடக கொட்டகைகளுக்குப் போகும்போதும், "பன்னிரண்டு வயதுக் குட்பட்ட சிறுவர்களுக்கு அரை சார்ஜ்" என்று எங்கெங்கே விளம்பரம் போட்டிருக்கிறதோ, அங்கெல்லாம் பதினொன்று பதினைந்து வரையில் அவர்களுக்கு இரண்டு மூன்று வயது குறைந்து போகிறது—பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர்களாகி விடுகிறார்கள்! சில வருஷங்களுக்கு முன்பு என் நண்பர் ஒருவருடைய மகனுக்கு நான் எழுதிய ஹரிச்சந்திர நாடகத்தைப் பரிசாகக் கொடுத்துப் படிக்கச் செய்தேன். பிறகு ஒரு நாள் அவனைச் சந்தித்து ஏதோ விஷயமாக அவன் வயது என்னவென்று கேட்டேன். அதற்கு அவன் (அரிச்சந்திரன் கதையைப் படித்தபடியால் உண்மையை உரைக்க விரும்பினவனாய்) "ரெயிலில் போகும் போது எனக்கு வயது பதினொன்று, பள்ளிக்கூடத்தில் பன்னிரண்டு; வீட்டில் பதின்மூன்று" என்று பதில் உரைத்தான்.

இந்தக் கஷ்டம் ஆண் பிள்ளைகளுக்கு மாத்திரம் என்று எண்ண வேண்டாம்-இது தற்காலம் நமது பெண் பிள்ளைகளையும் பீடித்திருக்கிறது. சுமார் பன்னிரண்டு பதின்மூன்று வயதில்—முக்கியமாக அவர்கள் திவிஜாதிப் பெண்களாயிருந்தால்—அவர்களுக்கு பத்து பன்னிரண்டு வயதிலெல்லாம்—கலியாணம் செய்யவேண்டு மென்று ஸ்மிருதிகளில் விதிக்கப்பட் டிருக்கிறது. சாரதா சட்டம் வராததற்கு முன்பாக அப்படியே அவர்களுக்குப் பெரும்பாலும் கலியாணமாகி வந்தது—தக்க வரன்கள் கிடைக்கும்போதெல்லாம். சில சமயங்களில் தக்க வரன் கிடைக்காவிட்டால் என்ன செய்வது? பதினொன்று பதினைந்து வயதானபோதிலும் பத்து பதினொன்று வயது சிறுமிகளாகவே வளராமலிருக்க வேண்டி வருகிறது. ஆனால்

இதில் தற்காலம் ஒரு வேடிக்கை. சாரதா சட்டம் வந்த பிறகு, சட்டம் எப்படி இருந்தபோதிலும் சாஸ்திர யுக்தமாக நடக்க வேண்டும் என்று விரும்பும் வைதிகர்கள், அவர்கள் பெண்களுக்கு பதினொன்று பன்னிரண்டு வயதுதான் ஆகியபோதிலும் பதினான்கு வயதாகிவிட்டது என்று சொல்லி கலியாணத்தை நடத்தி விடுகிறார்கள்! கோர்ட்டில் அதற்காக வியாஜ்யம் வந்தாலும் பதினான்கு வயதாகி விட்டது என்று பிரமாணம் செய்வதில் பாபமில்லை என்று நினைக்கிறார்கள்.

பிராம்மணர்கள் அல்லாத ஜாதியர்களிலும் தங்கள் பெண்கள் விவாக விஷயத்தில் வயதைப்பற்றிய ஒரு கஷ்டமிருக்கிறது. முதலியார் முதலிய ஜாதிகளில் பெண் ருதுவடைந்த பிறகே கலியாணமாவது வழக்கமா யிருந்தபோதிலும், ருதுவான நாலைந்து வருஷம் கலியாணமாகா திருந்தால் அது ஒரு குறைவாக மதிக்கப்படுவதால், பெண் பதினேழு பதினெட்டு வயதடைந்த போதிலும், பெண் கேட்க யாராவது வந்தால், பெண்ணுக்கு இப்பொழுதுதான் பதினான்காகிறது என்று தெரிவிப்பார்கள். அன்றியும் இன்னொரு கஷ்டமும் உண்டு. ஒரு முதலியார் பெண்ணுக்கு பதினெட்டு வயதா யிருக்கும், அவளது தாய் தந்தையார் கோரும் வரனுக்கு பதினேழு வயதுதான் ஆகியிருக்கும்; இதற் கென்ன செய்வது? மணமகனுக்கு வயதில் சிறியவளா யிருக்க வேண்டுமென்று, கலியாண தினத்திற்கு முன்பாக எத்தனை வருடங்கள் குறைக்கவேண்டுமோ அத்தனை அரைக்கால் ரூபாய்களை விழுங்கி விடச் செய்கிற புராதன வழக்கம் ஒன்று உண்டு. அப்படிச் செய்தால் வயது குறைந்து போகிறதாம்! அது உண்மையோ அல்லவோ வென்று நமது ஆயுர்வேத வைத்தியர்களுக்குத்தான் தெரியும்; எனக்குத் தெரியாது.

பிறகு நம்மவர்களில் கவர்ன்மெண்ட் உத்தியோகங்களை நாடுபவர்கள், தங்கள் வயதைக் குறிப்பதில் அரிச்சந்திரனுடைய சிஷ்யர்களாக இருப்பது கஷ்டமா யிருக்கிறது. அந்த உத்தியோகங்களில் இன்ன வயதுக் குட்பட்டவர்கள்தான் தேர்ந் தெடுக்கப்படுவார்கள் என்கிற விளம்பரமானது, திடீரென்று அநேகம்பெயரு

டைய வயதைக் குறைத்து விடுகிறது. அன்றியும் சாதாரணமாக துரைத்தனத்தில் உத்தியோகம் அபேட்சிப்பவர்களெல்லாம், பிறகு ஐம்பத்தைந்தாவது வயதில் பென்ஷன் வாங்கிக் கொள்ளும்படி கட்டாயப்படுத்தப் படாமலிருக்க, முதலில் அப்ளிகேஷன் போடும் பொழுதே இரண்டு மூன்று வருடங்கள் குறைத்து எழுதி, அஸ்தி வாரம் போட்டு வைத்துக் கொள்ளுகிறார்கள்.

ஆனால் இது சில சமயங்களில் கஷ்டத்திற்குள்ளாக்குகிறது. அதற்கு ஒரு உதாரணத்தை எடுத்துக் கூறுகிறேன். எனக்குத் தெரிந்த அண்ணன் தம்பிகள் இருவர் இருந்தனர். மூத்தவர் கவர்ன்மெண்ட் உத்தியோகத்திலிருந்தார்; அதைச் சேரும் பொழுதே தன் வயதை மூன்று வருடம் குறைத்து எழுதிவைத் தார்; அவர் தம்பி அவருக்கு இரண்டு வருடம் இளையவர். தம்பிக்கு ஷஷ்டி பூர்த்தி வந்தபொழுது, மூத்தவருக்கு கவர்ன்மெண்ட் ரிகார்டு களின்படி 58 வயதுதான் ஆயது! தம்பிக்கு ஷஷ்டி பூர்த்தி பகிரங்கமாய் நடத்தினால் அண்ணன் வயதைக் குறைத்தெழுதிய சமாசாரம் வெளியாகிவிடும். ஆகவே அண்ணன் தம்பியிடம் வந்து தம்பிக் குப் பகிரங்கமாய் ஷஷ்டி பூர்த்தி செய்ய வேண்டாமென்று வேண் டிக் கொண்டார்!

இச் சந்தர்ப்பத்தில் இந்தியாவின் மேல் மாகாணங்கள் ஒன்றில் உண்மையாய் நடந்த கதை எனக்கு ஞாபகம் வருகிறது. அங்கு ஒரு மகம்மதியர்—வக்கீலாயிருந்தவர்—தனது நாற்பத்தைந்தாவது வயதில், மாஜிஸ்டிரேட்டாக ஏற்படுத்தப்பட்டார். அப்பொழுது தன்னுடைய வயதில் 5-வருடம் குறைத்து 40-வயது என்று எழுதி வைத்துவிட்டார். பிறகு அவருக்கு அந்த உத்தியோகம் கிடைத்த தற்காக அவருடைய அத்யந்த நண்பர்களில் சிலர் அவருக்கு ஒரு விருந்து அளித்தனர். அந்த விருந்தான உடன், ஏதோ பேச்சில் அவருடைய வயதைப்பற்றி பேச்சு வர தன் உண்மையான வயதை மறைத்து, ஐந்து வயது குறைத்து சொல்ல வேண்டியதாயிற்று. அதன்படி, அங்கிருந்த அவரை குழந்தைப் பருவமுதல் அறிந்த அவரது நண்பர் ஒருவர் கணக்கிட்டுப் பார்த்தார்; இவர் வக்கீலாக இருபதுவருடம் வேலை பார்த்தார்—அதற்கு முன்பு ஒரு வருடம் அப்ரெண்டிசாக இருந்தார்—அதற்கு முன்பு லா காலேஜில் இரண்டு

வருடம் படித்தார்—காலேஜ் வகுப்புகளில் நான்கு வருஷம் கழித்தார்—என்று இப்படியே பின்னால் கணக்கிட்டுக் கொண்டுபோய், இவர் பிறப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்பாகவே வித்தியாரம்பம் பண்ணியிருக்க வேண்டுமென்று கண்டார்! இந்த அதிசயத்தை கவர்ன்மென்டாருக்கு வெளியிட்டால் தனது நண்பனுக்கு கெடுதி ஏற்படுமென்று அவர் வெளியிடவில்லை!

தங்கள் வயதைக் குறைத்துக் கூறவேண்டிய கஷ்டம் சில சமயங்களில் நடு வயதில் தங்கள் தாரத்தை இழக்கும் ஆடவர்களைப் பீடிக்கிறது—அவர்கள் இரண்டாவது கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று விரும்பினால் தங்கள் வயதை மிகவும் குறைத்துச் சொல்ல வேண்டியவர்களாயிருக்கிறார்கள். என்னுடைய நண்பர் ஒருவர் ஒரு கோமுட்டிச் செட்டியார் இருக்கிறார். அவருக்கு வயது 48. போன வருடம் அவர் தாரம் தெய்வீகத்தால் இறந்துபோய்விட்டது; இப்பொழுது அவர் இரண்டாம் விவாஹம் செய்துகொள்ளப் பிரயத்னப் படுகிறார். இந்த யோசனை அவருக்கு உதித்த நாள்முதல் அவரது வயது 38 ஆகிவிட்டது திடீரென்று! யார் கேட்டாலும்—முக்கியமாக அவருடைய பந்துக்கள் கேட்டபொழுதெல்லாம்—தனக்கு 38 வயது என்று சொல்லிக் கொள்ளுகிறார். ஆனால் இதற்காக செட்டியாருக்குக் கொஞ்சம் மாத செலவு அதிகமாச்சுது. இதற்கு முன் கொஞ்சம் வெண்மையாய் நறைத்துப்போன அவரது ரோமங்களை மறுபடியும் கறுப்பாக்கிக் கொள்ள மாதம்மாதம் 'கேஸ்ரஞ்சன்' தைலங்களை வாங்கவேண்டியவராயினர்!

வயதைக் குறைத்துக் கூறும் குணம் நம்முடைய தேசத்தார்களுக்குமாத்திரம் என்று எண்ண வேண்டாம், ஐரோப்பியர்களுக்குமுண்டு, முக்கியமாக அவர்களுடைய ஸ்திரீகளிடத்தில். பெரும்பாலும் ஐரோப்பிய ஸ்திரீகளை அவர்கள் வயது என்னவென்று கேட்பதே மரியாதை யல்லவென்று எண்ணப்படுகிறது. அவர்கள் பிரமாணத்தின்மீது சாட்சியாய்க் கூறும்பொழுதும், அவர்களுடைய வயதைப்பற்றி குறைத்துச் சொன்னால் அதற்காகப் பொய் சாட்சி கூறுகிறார்கள் என்று தண்டிக்கப் படமாட்டார்கள். ஐரோப்பிய ஸ்திரீகளுக்குள் விதவா விவாஹம் சாதாரணமா யிருப்பதுபோல்

நம்முடைய தேசத்திலும் ஸ்திரீகளுக்கு மறு விவாஹம் சாதாரணமா யுண்டாகிவிட்டால் நம்முடைய ஸ்திரீகளுக்கும் வயதைப் பற்றி குறைத்துக் கூறவேண்டிய கஷ்டம் உண்டாகி விடும்!

மேல் நாட்டு புத்திமான் ஒருவர் அங்குள்ளவர்கள் எல்லாம் இளமையில் தாங்கள் இருப்பதைவிட அதிக வயதானவர்கள் போல் காட்டிக் கொள்ளுகிறார்கள், முதுமையில் குறைந்த வயதுடையவர்களைப்போல் காட்டிக் கொள்ளுகிறார்கள் என்று எழுதி யிருக்கிறார்.

வயதைப்பற்றி நான் அறிந்த இரண்டு மூன்று கதைகளைக் கூறி இந்த வியாசத்தை முடிக்கிறேன்.

கிறிஸ்தவ கலாசாலையில் சுமார் 50 வருடங்களுக்கு முன் சின்னசாமி பிள்ளை என்று ஒரு தமிழ் உபாத்தியாயர் இருந்தார். அவருக்கு 65 வயதுக்குமேல் இருக்கும். அவர் ஒரு நாள் திங்கட் கிழமை "கருக்காக, முகக்ஷவரம் செய்துகொண்டு" பள்ளிக்கூடத்திற்கு வந்தார். அச்சமயம் அவரை டாக்டர் மில்லர் சந்தித்து, ஆங்கிலத்தில் "சின்னசாமி! மிகவும் சந்தோஷம்! உனக்கு வரவர வயது குறைந்துகொண்டு வருகிறது, நல்ல யௌவன முள்ளவனாகக் காண்கிறாய்!" என்று வேடிக்கையாய்ச் சொல்ல 'துரையவாள், எல்லாம் அம்பட்டனுடைய அனுக்கிரஹம்!' என்று பதில் உரைத்தார்.

சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்பாக அகௌண்டென்ட் ஜெனரல் (Accountant-general) ஆபீசிற்கு டப் (Tupp) என்கிற புதிய பிரதம உத்யோகஸ்தர் வந்தார். வந்ததும் தனது ஆபீசிலுள்ளவர்களையெல்லாம் பார்க்க வேண்டுமென்று சுற்றி வரும் பொழுது, அநேகம் வயோதிக குமாஸ்தாக்கள் தலையில் பாகையைப் போட்டுக் கொண்டிருப்பதைக் கண்டார். இதென்ன இது என்று தன்னுடன் வந்த சூப்பரின்டென்டைக் கேட்டபொழுது அவர், "இத்தேசத்தில் வயதானவர் களெல்லாம் இந்தப் பாகையைத் தான் தலையில் போட்டுக்கொள்வது" என்று பதில் உரைத்தார். ஆபீசையெல்லாம் சுற்றிப் பார்த்து வந்தவுடன் தன் சூபரின்டென்டிடம், "என்ன நம்முடைய ஆபீசில் அநேகம் பெயர் மிகவும் வயதானவர்கள் இருக்கிறார் போலிருக்கிறது" என்று கூறினார்; இந்த சமாசாரம் சாயங்காலத்திற் குள்ளாக அங்குள்ள வயதுசென்ற குமாஸ்தாக்களுக் கெல்லாம் எட்டிவிடவே, மறுநாள் 11-மணிக்கு

அவர்களெல்லாம் முகக்ஷவரம் செய்துகொண்டு, பழய பாகைகளை யெல்லாம் களைந்துவிட்டு, சரிகை தலை குட்டைகளை முடுக்காகக் கட்டிக்கொண்டு, இளைஞர்களாக, ஆபீசுக்கு வந்து சேர்ந்தார்களாம்!—எங்கு நம்மையெல்லாம் பென்ஷன் வாங்கிக்கொள்ளும்படி அகௌண்டென்ட் ஜெனரல் சொல்லுகிறாரோ என்று பயந்து! அன்று முதல் சென்னையில், பாகைகட்டி அதனால் வரும் ஊதியத்தைக்கொண்டு ஜீவிக்கும் பலருக்கு, பாதி வேலை போயிற்று என்று கேள்விப்பட்டேன்.

எனது நண்பர் போலீஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் இருந்தார் அவரது பெயர் உங்களுக்குத் தெரியவேண்டிய அவசியமில்லை—அவருக்கு வயது ஐம்பதுக்கு மேலாகி, அவரது ரோமமெல்லாம்—புருவம் உட்பட—வெண்மை நிறமாகி மாறிவிட்டது இது மற்றவர்களுக்குத் தெரியாதிருக்கவேண்டுமென்று தினம் எழுந்தவுடன் முகக்ஷவரம் செய்துகொண்டு, புருவம் உட்பட கேசத்திற்கெல்லாம் ஹேர்டை (Hair-dye) போட்டுக்கொண்டு தான் வீட்டை விட்டு வெளியிற் கிளம்புவார். ஒருநாள் அதி காலையில் ஒரு பெரிய கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தரை ரெயில் ஸ்டேஷனில் அவர் சந்திக்கவேண்டி வந்தது. அன்று மறதியினாலோ அல்லது அதிக நேரம் தூங்கிவிட்டபடியால் அவகாசமில்லாதபடியினாலோ—'கப்பு' போட மறந்து போய்விட்டார். அவரை நான் ஸ்டேஷனில் சந்தித்தபொழுது, சூட்சுமமாய் "என்ன பிள்ளையவாள், உங்கள் முகம் கொஞ்சம் மாறியிருக்கிறதே" யென்று தெரிவித்தேன். உடனே அவர் ஸ்டேஷன் வெய்டிங் ரூம் (Waiting-room) கண்ணாடியருகிற் போய் தன் வெளுத்த கேசத்தையும் புருவத்தையும் பார்த்து, பயங்கொண்டவராய், தான் பார்க்க வந்த உத்யோகஸ்தரையும் பாராது, "அவர் வந்தால், இதுவரையில் காத்துக் கொண்டிருந்தார், அவசரமான வேலையாக அவர் போய் விட்டார் என்று சொல்லிவிடுங்கள்" என்று என் இடம் கூறிவிட்டு, வீட்டிற்கு கம்பி காட்டினார்!—கப்பு போட்டுக்கொள்ள!

கடைசி கதை ஒன்று. ஒருமுறை நான் சிவகங்கைக்குப் போயிருந்த பொழுது அங்கு நல்ல தேகஸ்திதியிலிருந்த மிகவும் வயோதிகரான ஒரு பிராம்மணரைக் கண்டேன். அவருக்கு என் உத்தேசப்

படி 90 வயதுக்கு மேலிருக்கும். இவ்வளவு வயதாகியும் நல்ல தேகஸ்திதியிலிருக்கிறாரே, என்று சந்தோஷப்பட்டவனாய், "தங்களுக்கு என்ன வயதாகிறது?" என்று கேட்டேன். அவர் அதைக் கூறாது மயங்க, நான் "இனிமேல் உங்கள் வயதைச் சொல்ல என்ன தடையிருக்கப்போகிறது?" என்று வினவ, அவர் "வேறொன்றுமில்லை; சாஸ்திரங்களில் ஒருவனுடைய பொருள், ஒருவனுடைய வயது, ஒருவனுடைய ஆசாரியார் பெயர், இன்னும் இரண்டொரு விஷயங்களை, வெளியில் கூறக்கூடாது" என்று எழுதியிருக்கிறது என்று கூறி, ஒரு சம்ஸ்கிருத சுலோகத்தை எடுத்துக் கூறினார். அப்பொழுது, நமது முன்னோர்கள், இனிவரப்போகிற கஷ்ட நிவர்த்திக்காக, முன்பே ஸ்லோகங்களைச் செய்திருக்கிறார்களே, என்று சந்தோஷப்பட்டேன்! ஆயினும் ஒரு தப்பிதம் செய்தேன்; அந்த ஸ்லோகத்தை முற்றிலும் கேட்டு, பாடம் செய்து கொள்ள மறந்தேன். அதைக் குருட்டுப் பாடம் செய்திருப்பேனாயின் தற்காலம் தங்கள் வயதைக் குறைத்து கூற விரும்பும் டாக்கி ஆக்டர்களுக்கும் ஆக்ட்ரெஸ்களுக்கும் உபதேசித்திருக்கக் கூடுமல்லவா?

## ஓர் பிரசங்கம்

தாரப்பாக்கத்து தமிழ் சங்கத்தின் திறப்புவிழாவில் சபாபதி முதலியார் அவர்கள் செய்த பிரசங்கம்:—

கனவான்களே சபையோர்களே! உங்கள் சபை காரியதரிசியானவர், இன்றைத்தினம் என்னைத் தமிழில் ஓர் பிரசங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். தமிழ் பாஷையின் மீது எனக்குள்ள ஆர்வத்தினால் அதற்கு இசைந்தேன். பிரசங்கம் அதிகமாகயிருக்கவேண்டாம் சுருக்கமாயிருந்தால் போதும் என்று அவர் சொன்னபடியால், "ஆத்திச்சூடியிலுள்ள அரும்பொருள்கள்" என்கிற விஷயத்தைப்பற்றிப் பேசலாமென்று தீர்மானித்தேன்.

ஆத்திச்சூடி என்பது மிகவும் சிறிய புஸ்தகமாயிற்றே அதில் என்ன யிருக்கிறதென்று நீங்கள் எல்லோரும் எண்ணலாம். ஆயினும் எனது பிரசங்கம் முழுவதையும் கேட்ட பிறகு ஆத்திச்சூடியில் இவ்வளவு நூதனமான விஷயங்கள் அடங்கியிருக்கின்றனவா வென்று நீங்களே ஆச்சரியப்படுவீர்கள்.

முதலில் 'அறஞ்செய விரும்பு' என்பதை எடுத்துக்கொள்வோம். சாதாரணமாகத் தமிழ் பண்டிதர்களெல்லாம் அறஞ்செய = தருமத்தைச்செய், விரும்பு = இச்சைப்படு, என்று அர்த்தம் சொல்லுகிறார்கள். இது சாதாரணமான அர்த்தமாகும். இதில் உள்ள சூட்சுமார்த்தம் பலருக்குத் தெரியாது. அறம் + செய + இரும்பு, என்று இதைப் பிரித்துப்பார்த்தால் அப்பொழுது தான் அது விளங்கும். அறம் என்றால் தச்சர்கள் தட்டான்கள் முதலியோருக்கு மிகவும் உபயோகப்படும்படியான ஓர் ஆயுதம், செய = அதைச் செய்வதற்காக, இரும்பு = இரும்பானது சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது, என்பது இதன் இரகஸ்யார்த்தமாகும். இதில் என்ன விசேஷம் என்று நீங்கள் நினைக்கலாம் அதையும் சொல்லுகிறேன் கேளுங்கள். பூர்வீக விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் சாஸ்திரிகள், இந்தியாவில் முற் காலத்தில் இரும்பு கண்டு பிடிக்கப்படவில்லை யென்று, கூறுகிறார்கள். இது தவறு ஔவையார் காலத்திலேயே இரும்பானது நமது தமிழ் நாட்டில் கண்டு பிடிக்கப்பட்டிருந்தது என்று, அறஞ்செய விரும்பு என்பதினால் ரூபிக்கலாமல்லவா?

ஓடுவதொழியேல் (ஓதுவதொழியேல்) என்பது ஆத்திச்சூடியில் மற்றொரு வரியாகும். இதனால் நாம் என்ன அறிகிறோம் என்று ஆராய்வோம். ஓடுவது + ஒழியேல் = எந்நேரமும் ஓடிக்கொண்டிரு என்று அர்த்தமாகும், அதாவது எந்நேரமும் தேக அப்யாசம் செய்து கொண்டிரு என்று பொருள்படும். தற்காலம் மனுஷ்ய சரீரத்திற்கு வியாயாமம் அதி அவசியம் என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அதிலும் பெரும் நடையாய் நடப்பது அதாவது ஓடுவது மிகவும் உடம்பிற்கு நன்மையைத் தருகிறது, என்று மேநாட்டார் கூறுகிறார்கள். இந்த சூட்சுமம் நமது பாட்டி

யாருக்கு முன்பே தெரிந்திருக்கிறது; அதனால் தான் "ஓடுவதொழி யேல்" என்று நமக்கு புத்திமதி கூறியிருக்கிறார்கள். இதையே வற்புறுத்தும் பொருட்டு மற்றோரிடத்தில் ஔவையார் "ஓடாமல் (ஓதாமல்) ஒரு நாளு மிருக்க வேண்டாம்" என்றும் கூறி யிருக்கிறார்கள்.

பிறகு "இளமையிற்கல்" என்பதை எடுத்துக்கொள்வோம். இளமையில்+கல்=சின்ன வயதில் கல்லை சாப்பிடு என்று அர்த்தம். அதாவது கல்லைத் தின்னவேண்டுமென்பதல்ல; கல்லைப் போன்ற கடினமான பதார்த்தங்களைப் புசித்தாலும் ஜீர்ணித்துக்கொள்ளும் படியான அவ்வளவு சக்தியுள்ளவனாயிருக்கவேண்டுமென்று பொருள்; தமிழ் பாஷையை நன்றாயறியாத சிலர் இதற்கு வேறு அர்த்தம் செய்கின்றனர்.

நமது தற்கால ஆத்திச்சூடி புஸ்தகங்களில் "ஈயது விலக்கேல்" (ஈவது விலக்கேல்) என்று அச்சிடப்பட்டிருக்கிறது ஈ+அது+விலக்கேல், என்று இதைப் பிரிக்கவேண்டும். அப்பொழுது இதற்கு என்ன அர்த்தமாகும்? ஈயை விலக்காதே என்றும்! ஈயை எடுத்து விடாமல் சாப்பிட்டால் உடனே வாந்திதான் வரும்! இது சிறு குழந்தைகளுக்குக் கூடத்தெரியும் 'கண்ணும் பூச்சி' யாட்டத்தில் அவர்களை "ஈ விழுந்ததா? எறும்பு விழுந்ததா? எடுத்து விட்டு சாப்பிட்டாயா? எடுக்காமல் சாப்பிட்டாயா?" என்று கேட்டால், ஈ விழுந்தால், எடுத்துவிட்டு சாப்பிட்டேன் என்றுதான் பதில் சொல்வார்கள். ஆகவே இந்த உண்மை நமது மூதாதையாகிய பாட்டியாருக்குத் தெரியாமலிருக்குமா? ஆகவே அவர்கள் "ஈயது விலக்கு" என்று தான் எழுதியிருக்கவேண்டும் என்று தோற்றுகிறது.

"உடையது விளம்பேல்" என்பது ஒரு அருமையான வரியாம். இதற்கு அர்த்தம், உன் இடத்திலுள்ள பொருளைப்பற்றி ஒருவருக்கும் தெரிவிக்காதே என்றும். இதனால் நாம் அறிந்து கொள்ளக் கூடியதென்ன? அக்காலத்தில் கூட வருமானவரி யிருந்திருக்கவேண்டுமென்பதாம்! நம்முடைய கையில் இவ்வளவு பொருள் இருக்கிறதென எல்லோர்க்கும் தெரிவித்தால், உடனே அரசாங்கத்தார் அதற்காக அதிக வரிபோடுவார்களல்லவா? இக் காரணம் பற்றிதான் அநேகம் பெயர் தற்காலத்திலும் தங்கள் வரு

மான வரியைக் குறைக்கும் பொருட்டு தங்களிட முள்ள பொருளை உண்மையாக உரைப்பதில்லைபோலும்.

"ஊக்கமது கைவிடேல்" என்பதை எடுத்துக்கொள்வோம். இதற்குபெரும்பாலர், ஊக்கம் + மது + கைவிடேல் என்று அர்த்தம் செய்கின்றனர், அதாவது ஊக்கத்தைத் தரும்படியான மதுவைக் கைவிடலாகாதென்று! நமது எல்லாமுணர்ந்த ஔவையார் மது பானம் செய்யும்படி நமக்கு உபதேசிப்பார்களா? மாட்டார்கள். ஆகவே ஊக்கம் + அது + கைவிடேல் என்று இதைப்பிரித்து அர்த்தம் செய்யவேண்டும். ஆயினும் இந்த ஊக்கம் எனும் பதத்திற்கு என்ன அர்த்தம் என்று ஆலோசித்துப் பார்த்தேன். நமது சென்னை கலா சங்கத்தார் அச்சிட்ட லெக்சிகன் என்னும் அகராதியைத் திருப்பிப் பார்த்தேன். அதில் உக்கம் என்கிற பதம் அகப்பட்டது. உடனே இதற்கு அர்த்தம் ஸ்பஷ்டமாகி விட்டது. உக்கம் என்றால் = கட்டித் தூக்கியெடுக்கும் கயிறு! உக்கம் எனும் பதம் "ஆதி நீடல்" எனும் சூத்திரப்படி ஊக்கம் என்றாயது! இப்பொழுது அர்த்தம் சுலபமாய்த் தெரியலாம். ஏதாவது ஒரு வஸ்துவைக் கட்டித்தூக்கும் கயிற்றைக் கைவிட்டால், அது உடனே கீழே விழுந்து உடைந்து போகுமல்லவா? ஆகவே ஊக்கமது கைவிடேல்! என்று ஔவையார் கூறியுளார்!

பிறகு "கண்டொன்று சொல்லேல்" என்பதை எடுத்துக் கொள்வோம். கண்டு + ஒன்று + சொல்லேல் = எதையாவது ஒரு முக்கியமான விஷயத்தைப் பார்த்தால், அதை ஒருவரிடமும் சொல்லாதே என்று பொருள்படும், அதாவது நாம் பார்க்கும்படியான சமாசாரங்களை யெல்லாம் இரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டும்—வாய் திறந்து ஒருவரிடமும் கூறலாகாது. இதைத்தான் தெய்வப்புலமை திருவள்ளுவ நாயனரும் "யாகாவராயினும் நாகாக்க" என்று கூறியுள்ளார், அதாவது வாயைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும்—வாய் திறந்து எதுவும் பேசலாகாதென்று! இந்த நீதியைக் கடைப்பிடித்துதான் சில பெரிய மனிதர்கள், நியாய ஸ்தலங்களில் தாங்கள் கண்ணாரக் கண்டதை ஒன்றும் சொல்லுவதில்லை போலும்!

இனி "சனி நீராடு" என்பதை எடுத்து ஆராய்ந்து பார்ப்போம்; இதற்கு சனிக்கிழமை தோறும் ஸ்நானம் செய் என்று அர்த்தமாகும். இதனால் நாம் நமது முன்னோர்கள் வாரத்திற்கு ஒரு தரம் தான்குளித்தார்கள் என்று அர்த்தம் செய்து விடலாகாது. சனிக்கிழமை தோறும் எண்ணெய் தேய்த்துக்கொண்டு ஸ்நானம் செய்தார்கள் என்று நாம் அறியவேண்டும்.

"அரணைமறவேல்" (அரணைமறவேல்) என்பதற்கு சாதாரணமாக தமிழ் ஆராய்ச்சி செய்யாதவர்கள் ஏதோ தவறாக அர்த்தம் செய்கிறார்கள். அதற்குச் சரியான அர்த்தம் என்னவென்றால், அரணையெனும் பூச்சியை, அது சிறியதாயிருந்தாலும் நீ மறக்காதே, என்பதாம். அதை சிறு பாம்பு என்று நினைத்து சிலர் அதைக் கொல்கிறார்கள். அது பெரும் தவறாகும். 'அரணையைக் கொன்றால் மரணம்' என்னும் பழமொழி இந்த சந்தர்ப்பத்தில் கவனிக்கத் தக்கது.

சில பூர்வீக சாஸ்திர ஆராய்ச்சிக்காரர்கள் திராவிட தேசத்தில் பூர்வகாலத்தில் குதிரைகள் கிடையாது, வெளிநாடுகளிலிருந்து வந்தன, என்று சொல்கிறார்கள். அவ்வெண்ணம் தவறு என்று நாம் ஆத்திச்சூடியைக் கொண்டு ரூபிக்கலாம். "கொள்ள விரும்பேல்" என்பதை எடுத்துக்கொள்வோம். இதற்கு கொள்ளு என்னும் தானியத்தை நீ விரும்பாதே-சாப்பிடாதே-என்று அர்த்தமாகும். கொள்ளு என்னும் தானியம் குதிரைகள் தான் முக்கியமாகப் புசிக்கின்றன என்பது எல்லோரும் அறிந்த விஷயம். அந்த கொள்ளை நாம் சாப்பிட்டு விட்டால், குதிரைகள் பாபம் என்ன செய்யும்? ஆகவே கொள்ளை நீ விரும்பாதே என்று ஔவையார் சொன்னார்கள். ஆகையினால் ஔவையார் காலத்தில் குதிரைகள் தமிழ் நாட்டில் இருந்திருக்கவேண்டுமென்பதற்குச் சந்தேகமில்லை.

"தையல் சொற் கேளேல்" என்பதற்கு சில பாமரர்கள் பெண்கள் சொற்களைக் கேளாதே என்று அர்த்தம் செய்கின்றனர். ஔவையார் ஒரு ஸ்திரீயாயிருந்து கொண்டு பெண்கள் சொல்லைக் கேளாதே என்று உபதேசிப்பார்களா? மாட்டார்கள். இதற்கு அர்த்தம் முதலில் எனக்கு புலப்படாமலிருந்தது. பிறகு மிகவும்

6

கவனித்துப் பார்த்த பிறகுதான் வெளிப்படையாயிற்று. தையல் என்பது தொழில் ஆகுபெயராம்; தையற்காரனைக் குறிப்பதாம். அதாவது தையற்காரர்களுடைய சொல்லை நீ நம்பாதே என்று அர்த்தமாகும். தையற்காரர்கள் எப்பொழுதும் சொக்காய் முதலிய வற்றிற்கு துணி எவ்வளவு வேண்டுமென்றால், ஒன்றிற்கு இரண்டா கக் கூறுவார்கள்; பிறகு தாங்கள் அதைக் கிழித்து எடுத்துக் கொள் வதற்காக.—அதற்காக தையற்காரர்கள் சொல்லை நம்பாதே என்று நமது ஔவையார் நமக்கு போதித்திருக்கின்றனர்.

“தொன்னை மறவேல்” (தொன்மை மறவேல்) என்பது இன் னொரு சிறந்த அடியாகும் ஆத்திச்சூடியில். இது என்ன அற்ப சமாசாரம் ஆயிற்றே, இதைப்பற்றி ஔவையார் ஏன் எழுதினார்கள் என்று முதலில் நான் நினைத்ததுண்டு. பிறகு ஒரு நாள் எனது நண்பர் ஒருவர் வீட்டிற்கு நான் விருந்து சாப்பிடப்போனபோது இதன் சூட்சுமத்தை யறிந்தேன். சாப்பாட்டின் கடைசியில் பாய சம் அங்கு வழங்கினார்கள்; ஆனால் தொன்னை போட மறந்து போய் விட்டார்கள். பாயசத்தை இலையில் விட்டால் அது நான்கு பக்க மும் ஓட ஆரம்பித்தது, பக்கத்து இலைக்கும், ஓடிப்போய் எச்சலாக் கிற்று! அப்பொழுது இந்த ஆத்திச்சூடியடி ஞாபகம் வந்தது! தொன்னையை மாத்திரம் மறவாமல் வாங்கிக்கொண்டு வந்து பரி மாறி யிருந்தால் இந்த கஷ்டமெல்லாம் வந்திராதே என்று ஔவை யாரைப் புகழ்ந்தேன்! ஆகவே இந்த ஆத்திச்சூடி வரியைப் படித்த வர்கள் எந்த விருந்திலும் தொன்னையை மறக்கமாட்டார்கள் என் பது நிச்சயம்.

இன்னொரு முக்கியமான விஷயம் நாம் ஆத்திச்சூடியில் கவ னிக்கவேண்டியிருக்கிறது. தற்காலத்திய மேல்நாட்டு சாஸ்திரிகள், தாங்கள் ஏதோ வைடமின்ஸ் (Vitamins) என்பவைகளைக்கண்டு பிடித்ததாகப் பெருமை பாராட்டுகின்றனர்; இந்த வைடமின்ஸ் விதைகளில் அதிகமாக யிருப்பதாகவும் கூறுகின்றனர். இந்த ரகசியம் முற்காலத்திலேயே நமது நாட்டு கிழவிகளுக்குக் கூட தெரிந்திருக்கிறது, இல்லாவிடில் ஆத்திச்சூடியில் “வித்தை விரும்பு” என்று ஔவையார் எழுதியிருப்பார்களா? வித்தை = விதைகளை,

விரும்பு=நீ சாப்பிடு. இதில் மற்றொரு சூட்சுமார்த்தமுண்டு ; அதாவது விதைகளிருந்தால்தானே பயிர் செய்ய முடியும், ஆகவே வித்தை விரும்பு என்பது ஆத்திச்சூடியில் மிகவும் முக்கியமான ஒரு வரியாம். ஆயினும் இதில் எனக்கு ஒரு சந்தேகம் உண்டு, வித்தைவிரும்பு என்று சொல்லிவிட்டு, "வாதுமைக் கோரேல்" (வாதுமுற் கூறேல்) என்று ஏன் எழுதினார்களோ தெரியவில்லை. எல்லா வித்தையும் விரும்பும்படி உபதேசித்து விட்டு, வாதுமைக் கொட்டையை மாத்திரம் ஏன் வேண்டாமென்று சொல்ல வேண்டும்? இது ஆராயத்தக்க விஷயம்.

கடைசியாக "ஓரம் செல்லேல்" (ஓரம் சொல்லேல்) என்பது ஒருவரியாம். இதுவும் நம்முடைய சிறுவர்களுக்கு சிறந்த புத்தி மதி தருவதாம். தெருக்களில் ஓரமாகச் சென்றால் சாக்கடைகள் முதலிய அசங்கியங்கள் இருக்கும், ஆகவே நடுவில் போவதுதான் சரி, என்று இதனால் நாம் அறியவேண்டியிருக்கிறது.

# தமிழ் மாது படும் கஷ்டம்

நமது தாய் பாஷையாகிய தமிழ் மொழியானது தமிழ் மக்கள் வாயிலேயே மிகவும் துன்புறுகிறது என்பது யாவரும் விசனிக்கத்தக்க விஷயமே. சுத்தமாகத் தமிழ் பேசுபவர்கள்சிலரே என்று கூறவேண்டும். இங்கிலீஷ் பாஷை நமது நாட்டில் நுழைந்த பிறகு, தமிழ் கலப்பு பாஷையாகி விட்டது. "அழுதாவது சொல்லு சொல்லியாவது அழு, இரண்டையும் ஒன்றாகச் செய்யாதே" என்று ஒருவர் கூறியபடி, நாம் தமிழாவது பேசவேண்டும், இங்கிலீஷாவது பேசவேண்டும்; இரண்டையும் கலந்து பேசினால், என் செய்வது? இதைப்பற்றி எனது நண்பர் ஒருவர் "என்ன சார் (sir) டமில் பியூரா (Tamil pure) பேசத்தெரியரதில்லே, லாட்ஸ்

ஆப் இங்கிலீஷ் வொர்ட்ஸ் (lots of English words) யூஸ் (use) பண்ராங்க!" என்ருர்! இந்த கஷ்டத்தை நான் யாரிடம் சொல்வது?

தமிழ் பாஷை மாத்திரம் தெரிந்தவர்கள் கூட, பேசும் பொழுது மிகவும் கொச்சையாய்ப் பேசுகிருர்கள்—அதிலும் முக்கியமாக சென்னைவாசிகளைப்பற்றி கேட்கவேண்டியதில்லை. தமிழில், ஆங்கிலம், தெலுங்கு, இந்துஸ்தானி முதலிய பதங்களைக் கலந்து கதம்ப பாஷையாக்கி விடுகிருர்கள். ஏறக்குறைய திருத்தமாகத் தமிழ் பேசும் யாழ்ப்பாணிகள் சென்னை வாசிகள் பேசும் தமிழைக் கேட்டு, இது தமிழ்தாளு என்று ஆச்சரியப் படுகிருர்கள்.

பேசும்பொழுதே இக்கதியென்ருல், எழுதும்பொழுது கேட்க வேண்டியதில்லை. காலேஜு கார்டில் தமிழில் பி.ஏ., பட்டம் பெற்ற ஒருவர் எழுதும்பொழுது, ஒரு பிழைக்கு தம்பிடி கொடுப்பதானுல், இரண்டணுவிற்கு மேல் அபராதம் கொடுக்கவேண்டும்! ர (மெல்லினம்) ற (வல்லினம்) என்று எழுத்துகளுக்கு பேதமே யில்லை என்று நிரூபித்து விடுகிருர்கள். அன்றியும், ந, ன, எனும் இரண்டு எழுத்துகள் என்னத்திற்கு? ஏதாவது ஒன்றே போதும் எனும் கொள்கை யுடையவர்களாயிருக்கின்றனர் பெரும்பாலார். தன் பெயருக்குப் பின் நான்கு எழுத்துகள் (பி. ஏ., பி. எல்.,) பட்டம் ஒரு தமிழர் தன் பெயரை "ருமசாமி ஐயங்கார்" என்று தமிழில் தன் கடிதத்தின் தலைப்பில் போட்டுக்கொள்ளுகிருர்! தமிழில் அச்சிடுபவர்களாவது இதையெல்லாம் கவனிப்பார்கள் என்ருலோ, அதையும் காணும். ஒரு தமிழ் விளம்பரத்தில் "சவால் கூருதல்" என்று அச்சிடப்பட்டிருக்கிறது! இதில் இன்னொரு வேடிக்கை யென்னவென்ருல், இதை அச்சிட்ட தமிழருக்கு சவால் எனும் இந்துஸ்தானிபதத்திற்கு தக்க தமிழ்பதம் கிடைக்கவில்லை போலும் 'கேள்வி' எனும் பதத்தை அவரது செவிகள் கேட்டில்லை போலும்.

மதுரை யென்பது செந்தமிழ் நாடு என்று எல்லோராலும் மதிக்கப்படுகிறது. அங்கு மீனுட்சி சுந்தரேஸ்வரர் கோயில் உற்சவப்பத்திரிகையில், ஒருவர் பெயர் "வெங்கடாஜல ஐயர்" என்று அச்சிடப்பட்டிருக்கிறது! வேங்கடம் எனும் அசலத் (மலை) தைப் பற்றி அறிந்திருக்கிறேன், வேங்கடம் எனும் ஜலத்தை (நீரை)ப்

பற்றி கேள்விப்பட்டதில்லை. இவ்விதமே நமது பண்டாரங்கள், அருணசலத்தை (அருண + அசலம்) அருணஜலமாக்கி விடுகிறார்கள். அசலம் என்றால் சலனமில்லாதது என்று பொருள் படும், ஆகவே யாவராலும் அசைக்க முடியாத மலைக்குப் பெயராயது; எந்நேரமும் சலனமுடையதாயிருக்கும் ஜலத்திற்கும் அதற்கும் என்ன சம்பந்தம்?

நமது முனிசிபாலிடியார் நமது பணத்தை மிகவும் சிக்கனமாகச் செலவழிக்கவேண்டியவர்கள் கூட, வீதிகளின் பெயர்கள் எழுதவேண்டிய பலகைகளில், தெரு என்றும் பதமிருக்க அதற்கு ஒரு எழுத்தைச் சேர்த்து 'தெருவு' என்று எழுதி விடுகிறார்கள்!

சிலர் தமிழ் பாஷையை மிகவும் இலக்கணமாகப் பேசுகிறோம் என்றெண்ணி, 'தேகம்' என்பதற்குப் பதிலாக 'திரேகம்' என்று உச்சரிக்கின்றனர்! இவ்விதமே மற்றும் சிலர் விற்குமிடம் என்பதற்குப்பதிலாக விர்க்குமிடம் என்று வரைகின்றனர்.

தமிழர்களாய்ப் பிறந்தவர்கள் தமிழ் பதங்களை உபயோகிப்பதற்கே இக்கதியானால் மற்ற பாஷைகளிலுள்ள பதங்களை உபயோகிப்பதில் நாம் என்ன சொல்லக் கூடும்? "துரௌபதி வஸ்திராபஹரணம்" என்பது ஒரு பாரதக் கதையாம், வஸ்திரம் + அபஹரணம், என்பவை இரண்டு வடச் சொற்களாம்; அதை மாற்றி அநேகப் பத்திரிகைகளில் "துரௌபதி வஸ்திராபரணம்" என்று அச்சிட்டத்தைப் பார்த்திருக்கிறேன். இதைப் பிரித்தால் வஸ்திரம் + ஆபரணம் என்றாகும். துரௌபதி வஸ்திராபரணம் என்பது வியாச பாரதத்தில் இல்லாத புதிய கதை போலும்.

தமிழில் பிரசங்கம் செய்யும் பாகவதர்கள் விஷயத்திலேயே இப்படியானால், சாதாரணமாகக் கொச்சையாகப் பேசும் நடிகர்கள் விஷயத்தில் நாம் எப்படி குறைகூறுவது?

நடனம் செய்யும் மாதை "நடினமாது" என்று ரங்கத்தில் அழைத்தால், அவள் கதாநாயகனை "பிராணிநாதா." என்று கூப்பிடுவதில் தவறென்ன? இதற்கும் அதற்கும் சரியாக விருக்கிறதல்லவா?

கடைசியாக நமது தமிழ் சங்கீத வித்வான்கள் வேறு பாவை யைக் கொல்லும் விதத்தை கூறி முடிப்போம். ஒரு சங்கீத வித்வான், தமிழர் அவர், சம்ஸ்கிருதமும் தெலுங்கும் கொஞ்சமும் அறியாதவர், தியாகையரவாள் கிருதி 'நின்னெவரனி' என்பதைப் பாடிக்கொண்டுவந்தார். அதன் தாத்பர்யம் "ஹே ராமா! உன்னையார் என்று நிர்ணயிப்பேன்-சிவன் என்பேனு, விஷ்ணு வென்பேனு, பிரம்மன் என்பேனு ?" என்பதாம். "சிவுடனோ, மாதவுடனோ" என்பதற்குப் பதிலாக செவிடனோ? மா—தவுடனோ? என்று அரை மணி சாவகாசம் சங்கதிகள் போட்டு பாடினார். தியாகையரவாள் தீர்க்கதிருஷ்டியால் தன் பாட்டை இவ்வாறு கொலை செய்யக் கூடு மென்று தெரிந்திருப்பாராயின் இந்தக் கிருதியை எழுதியே யிருக்க மாட்டார் என்று நம்புகிறேன்.

"எந்துகு நிர்தயா" என்பது ஐயரவாளுடைய மற்றொரு கிருதி யாம். என்மீது தயையில்லாமலிருப்பதற்குக் காரணம் என்ன? என்பது அதற்குப் பொருளாம். இதை "எந்துகு நீதயா ?" 'உன் தயை எனக்கு என்னத்திற்கு?' என்று தமிழ் சங்கீத வித்வான் களில் சிலர் பாடுகின்றனர். இந்தப் பாபம் யாரைச் சாருமோ எனக் குத் தெரியாது. உங்களுக்குள் யாருக்காவது தெரிந்தால் தயவு செய்து எகுளனக்கெழுதி யனுப்புங்கள்.

## சுபவார்த்தை

தெற்கில் ராமநாதபுரம் தாலூகாவில் இளவூர் என்று ஒரு கிராமமுண்டு. அந்த கிராமத்தை அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் "எளவூர்" என்று அழைக்க ஆரம்பித்து, வாழைப்பழம் என்பது "வாளப்பளம்" என்று மாறியது போல், 'எழவூராக' மாறியது.

இந்த கிராமத்தில் வசிப்பவர்களில் பெரும்பாலார், நாட்டுக் கோட்டை செட்டிமார்கள். அவர்களுள் நெடுங்காலமாக, பேசும்

போதெல்லாம் 'எழவு' 'எழவு' என்னும் பதம், நடமாட வாரம் பித்தது. அதன் பேரில் அங்குள்ள ஒரு வயோதிகர் "இதென்ன நமது பிள்ளைகளெல்லாம் எந்நேரமும் எழவு எழவு என்று சொல் லிக்கொண்டிருக்கிறார்களே, பெரிய பேரெழவாகி விட்டது இந்த வழக்கம், இதை எப்படியாவது நாம் தடுக்கவேண்டும்" என்று எண்ணினவராய், ஒரு கூட்டம் போட்டு, அதில் அவ்வூர் ஜனங்களை யெல்லாம் வரவழைத்து, அதில் பிரசங்கம் செய்ய ஆரம்பித்த பொழுது, பெருங் கூச்சலாயிருக்க. "நண்பர்களே!—அடே சத்!—என்ன எழவு பெரிய கூச்சலாயிருக்கிறது!—இந்த பெருங் கூச் சல் எழவில்—நான் பேசுகிற எழவு—எப்படி கேட்கும்?—கொஞ் சம் சந்தடி போடாமலிருங்களேயா எழவு!"—என்று உரக்கக் கத் தவே, கொஞ்சம் சந்தடி அடங்கியது. அதன் பிறகு அடியிற் கண்டபடி பிரசங்கம் செய்தார்:—

"நண்பர்களே! நாம் எல்லாம் இப்பொழுது ஒன்றாய்க் கூடி யிருப்பது—நம்முடைய வூரில் பலர், பேசும் போதெல்லாம் எழவு எழவு என்கிற எழவெடுத்த பதத்தை அடிக்கடி உபயோகிக்கிற வழக்கத்தை—எப்படியாவது எழவு—முற்றிலும் ஒழிக்கவேண்டு வதற்காம். நமது வாழ்க்கையில் ஏற்கனவே, துன்ப எழவு, காடாத்து எழவு, இந்த எழவு, அந்த எழவு, முதலிய பல எழவுகள் இருக்கின்றன. சாதாரணமாகச் சும்மாகப் பேசும் பொழுதும் இந்த எழவை அடிக்கடி இழுத்துக்கொள்வானேன்? இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் — எழவு — கலியாண விஷயமாய்ப் பேசும் பொழுதும், இந்த எழவெடுத்த வார்த்தையை நம்மவர்கள் உபயோகிக்கிறார்கள்! இந்த எழவு எனும் கெட்ட வார்த்தையை நமது பாஷையிலிருந்து, எடுத்துவிட்டாலொழிய நம்மைப் பிடித் திருக்கும் இந்த எழவு—நம்மை விட்டுப் போகவே போகாது! ஆதலால் இந்த எழவெடுத்த பதத்தை நாம் இனி பேசும்போது உபயோகிக்கக்கூடாதென்று, நான் பிரேரேபிக்கிறேன்."

அதன் பேரில் இதை ஆமோதிக்கும்படி, எ. மு. மு. ராமசாமி செட்டியார், கூட்டத்தின் அக்கிராசனாதிபதியாகிய த. மோ. கந்தன் செட்டியாரால் கேட்கப்பட்டபோது, அவர் "இதென்ன எள

வையா, என்னை இருக்கிறைக!—அவர் பேசிய எளவு என் காதிலே ஒரு எளவும் விழலே—எனக்கோ, காது எளவு கொஞ்சம் மந்திபம், நான் என்ன எளவு பேசரது?" என்ருர்.

அதன் மீது அங்கிருந்த பஞ்சாட்சர செட்டியார் என்பவர் "ஐயா, அவர் பேசினதெல்லாம் என் காதுலே விளுந்தது! இந்த எளவு என்கிற பதம்பெரிய எளவாகத்தானிருக்கு, அதைவிடவேண்டியது முக்கியமான எளவு எனக்கு என்று தோன்றுகிறது" என்ருர். அதன் பேரில் வந்திருந்தவர்களெல்லாம் "ஆமாம் ஆமாம் இந்த எளவு ஒழியட்டும்" என்று கத்தி கை தூக்கினார்கள். பிறகு கூட்டம் கலைந்தது, கலைந்தவுடன் அடுத்த ஊரில் இருந்து வந்த ஒரு சாயபு, தன் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஒரு செட்டியாரைப் பார்த்து "சாமி, இந்த மீட்டிங்லே என்ன தீர்மானம் பண்ணுங்க சாமி?" என்று கேட்க, அச் செட்டியார் "அது என்ன எளவோ எனக்குத் தெரியாது—எல்லாரும் கையைத் தூக்கவே நானும் என் கையே தூக்கினேன்" என்று கூறிவிட்டு விரைந்து போய் விட்டார். அந்த சாயபு, எப்படியாவது என்ன தீர்மானம் பண்ணினார்களென்று அறிய விரும்பினவனாய், மற்றொரு செட்டியாரை வழிமறித்து "சாமி! நீங்க சொல்லுங்கசாமி! இந்த மீட்டிங்லே என்னமோ எளவு எளவு இண்ணு பேசறுங்களே அது என்ன சாமி?" என்று கேட்டான். அதற்கு அவர் "இந்த கூட்டத்துலே, எளவு என்கிற பதத்தே, யாரும் உபயோகிக்கக் கூடாது இண்ணு தீர் மானிச்சாங்க! இந்த தீர்மானத்திலெல்லாம் அந்த எளவு நம்மெவிட்டுப் போகுமா என்ன? அந்த எளவு, எங்க ஜாதியே விடவே விடாது! அதை விட சுப வார்த்தையாக எல்லாரும் பேச வேணும் இண்ணு—ஒரு—எளவு—தீர்மானம் பண்ணால் நண்ணயிருக்கும்" என்று பதில் கூறிவிட்டுப் போனார்.

முற்றிற்று.

---

சென்னை 'பியர்லெஸ்' அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது.